

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022

## சுற்றாடல் அமைச்சு

# சுற்றாடல் அமைச்சு

**கௌரவ நசீர்; அஹமட்**

**சுற்றாடல் அமைச்சர்;**

# அமைச்சின் பிரதான அலுவலர்கள்

**வைத்தியர் அனில் ஜாசிங்க**
**செயலாளர்**

**திரு.ஆர;.ஏ.ஆர்;.ஆர்.; ரூபசிங்க**
**மேலதிகச் செயலாளர்; - நிருவாகம்**

**டப்.ஜீ.டப்.எம்.டப்.ரீ.பி. திசாநாயக்க**
**மேலதிகச் செயலாளர்; - சுற்றாடல் கொள்கை**

**டப்.டீ.எஸ்.சீ.வெலிவத்தை**
**மேலதிகச் செயலாளர்; - இயற்கை வளங்கள்**

**திரு.பீ.முதலிகே**
**பணிப்பாளர்; நாயகம் - திட்டமிடல்**

**திருமதி. டப்.ஜீ.குமாரகம**
**மேலதிகச் செயலாளர் - சுற்றாடல் கருத்திட்டம் கல்விப் பயிற்சி**

**திரு. ஆர்;.டீ.எஸ்.ஜயதுங்க**
**மேலதிகச் செயலாளர; - சுற்றாடல் அபிவிருத்தி**

**திருமதி. சுனேத்திரா பத்திரத்ன**
**தலைமை நிதி அலுவலர்;**

## அமைச்சுக்கு உரிய அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள்

| | |
|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபை | - - திரு.சுபுன் எஸ். பத்திரகே, தலைவர்<br>- திரு.பீ.பி.ஹேமந்த ஜயசிங்க, பணிப்பாளர் நாயகம். |
| புவிச் சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பணியகம் | - வைத்தியர். செனரத் ஹேவகே, தலைவர்<br>திரு.பொறி.சன்ஜன த சில்வா, பணிப்பாளர் நாயகம். |
| வரையறுக்கப்பட்ட GSMB தொழிநுட்ப சேவை தனியார் கம்பனி | - திரு.பீ.டீ.மஹஆரச்சி பிரதம நிறைவேற்று அலுவலர்<br>(ப.க) |
| இலங்கை கிளைமட் பண்ட் பிரைவட் லிமிடட் | - திரு.ஜீ.ஏ.எம்.சீ. ஆரியதிலக்க பிரதம நிறைவேற்று<br>அலுவலர் |

**உள்ளடக்கம்** **ப. இல**


| | | |
|---|---|---|
| 1. | 1 அத்தியாயம் | |
| 1.1 | அறிமுகம் | 01 |
| 1.2 | அமைச்சின் தூர நோக்கு மற்றும் பணிக்கூற்று | 02 |
| 1.3 | முதன்மைப் பணிகள் | 03 |
| 1.4 | நிறுவனக் குறிப்பு | 04 |
| 1.5 | அமைச்சின் கீழுள்ள திணைக்களம்/ நிறுவனம் | 05 |
| 1.6 | அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்தின் கீழுள்ள நிதியங்கள் | 05 |
| 1.7 | வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்களின் தகவல்கள் | 05 |
| 2. | 2 ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் | 08 |
| 2.1 | சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் | 08 |
| 2.1.1 | சூழல் கொள்கைகள் பகுப்பாய்வு மற்றும் அமுலாக்கல் திட்டமிடல் | 08 |
| 2.1.2 | இலங்கையின் பல்வகைமையைப் பேணுதல்/பாதுகாத்தல் | 09 |
| 2.1.3 | காலநிலை மாற்றத்தின் சவால்களை வெற்றிகொள்ளல் | 10 |
| 2.1.4 | வளி வளங்கள் முகாமைத்துவம் | 12 |
| 2.1.5 | சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம் | 13 |
| 2.1.6 | சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனப்எபொருட்கள் முகாமைத்துவம் | 14 |
| 2.1.7 | புவியியல் வளங்கள் பேணல்/பாதுகாப்பு | 14 |
| 2.1.8 | சுற்றாடற் கல்வி மற்றும் அறிவுறுத்துதல் | 15 |
| 2.1.9 | சர்வதேச சுற்றாடல் உறவுகள் | 18 |
| 2.1.10 | சுற்றாடல் தினக் கொண்டாட்டங்கள்/வைபவங்கள் | 20 |
| 2.1.11 | ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 21 |
| 2.1.12 | சுவாசம் தரும் மரங்கள் தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் | 21 |
| 2.1.13 | தாபனச் செயற்பாடுகள்/ அலுவல்கள் | 22 |
| 2.1.14 | உள்ளக்க் கணக்காய்வு | 22 |
| 2.1.15 | சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான பொது மக்கள் முறைப்பாடுகள், மேன் முறையீடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள் | 22 |
| 2.1.16 | சட்ட நடவடிக்கைகள் | 22 |
| 2.2 | அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களின் முன்னேற்றம் | 23 |
| 2.2.1 | சமூக அடிப்படைச் சுற்றாடல் முறைமை அணுகுமுறையின் மூலம் வனங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகள் ஒருங்கிணைந்த முகாமைத்துவச் செயற்றிட்டம் | 23 |
| 2.2.2 | பொலிக்லோரினீட் பயிபினயில் திண்மக் கழிவுகள் மற்றும் பொலிக்லோரினெட் அடங்கிய உபகரணங்களை சுற்றுச்சூழலுக்குச் சாதகமான முறையில் முகாமைத்துவம் மற்றும் அகற்றல் செயற்றிட்டம் | 25 |
| 2.2.3 | மீனமாட்டா உடன்படிக்கையின் கீழ் இரசம் அடிப்படைப் மதிப்பீட்டு அறிக்கை" குறித்த செயற்றிட்டம் | 25 |
| 2.2.4 | கல்லீரல் பாதுகாப்பான பரிகார/சிகிச்சை முறையொன்றாக உள்நாட்டு பாரம்பரிய மருத்துவ முறையொன்றான இரசம் உள்ளடங்கிய "லோகநாத ரச" மருந்துகளின் பாவனை தொடர்பான கற்கை | 26 |
| 2.2.5 | மினமாட்டா சமவாயத்திற்குரிய விசேட சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இரசம் அடங்கிய மற்றும் இரசம் கலக்கப்பட்ட கழிவுகளைக் குறைப்பதற்கான தேசிய திறன் விருத்திச் செயற்றிட்டம் | 26 |
| 2.2.6 | சமுத்திரக் கழிவுகளும், நுண் பிளாஸ்ரிக்: கழிவுகளும் சுற்றாடல் நட்புறவானவாறு சூழலுக்கு இசைவான அடிப்படையில் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாவதைத் தடுத்தல் மற்றும் குறைத்தல | 27 |

| | | ப. இல |
|---|---|---|
| 2.2.7 | ஆசிய பசிபிக் நாடுகளுக்கு ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தியதன் பின்னர் வீசுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் அதனது கழிவுகளைப் பாதுகாப்பது நட்புறவுச் சிறந்த சூழலுக்கு இசைவானது. ஒரு முகாமைத்துவ அமைப்பின் இயலளவைக் கட்டியெழுப்புதல் | 28 |
| 2.2.8 | உலகளாவிய சுற்றாடல் வசதிகளின் கீழுள்ள ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கப் படுதலைத் தடுக்கும் உடன்படிக்கைக்கு உரிய தேசிய அறிக்கையிடல் செயன்முறை | 28 |
| 2.2.9 | சுவதாயி நிலக் குறிகாட்டி செயற்றிட்டம் | 29 |
| 2.2.10 | இலங்கையில் நிலையான மற்றும் வினைத்திறனான மின் இடப்பெயர்வு முறைமையொன்றை மேம்படுத்தல் தொடர்பான செயற்றிட்ட தீர்மானத்தை தயாரித்தல் | 29 |
| 2.2.11 | இலங்கையில் மொன்றியல் அமைப்பின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல். | 30 |
| 2.2.12 | உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பு பற்றிய கார்டன்ஜீனா அமைப்புக்கு ஏற்ப தேசிய உயிரியல் பாதுகாப்பு வேலைச் சட்டகத்தை நடைமுறைப்படுத்தல். | 32 |
| 2.3 | அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்களின் முன்னேற்றம் | 33 |
| 2.3.1 | மத்திய சுற்றாடல் அதிகார சபை | 33 |
| 2.3.2 | புவிச் சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கம் பணியகம் | 37 |
| 2.3.3 | ஜீ எஸ் எம் பி டெக்னிகல் சர்விஸ் தனியார் நிறுவனம் | 41 |
| 2.3.4 | இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) லிமிடட் | 44 |
| **3.** | மூன்றாம் அத்தியாயம் - வருடத்தின் மொத்த நிதி செயலாற்றுகை | 49 |
| 3.1 | நிதிச் செயலாற்றுகை கூற்று | 49 |
| 3.2 | நிதி நிலைமைக் கூற்ற | 51 |
| 3.3 | நிதிப் பாய்ச்சல் கூற்று | 53 |
| 3.4 | நிதி அறிக்கைக் குறிப்புக்கள் | 53 |
| 3.5 | வருமான சேகரித்தல் செயலாற்றுகைப | 54 |
| 3.6 | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 54 |
| 3.7 | நி.ஒ.வி . 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு/ மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் | 54 |
| 3.8 | நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் செயலாற்றுகை | 54 |
| 3.9 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 74 |
| **4.** | நான்காம் அத்தியாயம்- செயலாற்றுகைச் சுட்டிகள் | 74 |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் | 74 |
| **5.** | ஐந்தாம் அத்தியாயம்- நிலைபேநான அபிவிருத்தி இலக்குகளின் அடைவினை (SDG) அடைந்துகொள்ளல் செயலாற்றுகை | 74 |
| 5.1 | அடையாளம் காணப்பட்ட உரிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் | 76 |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான வெற்றிகள் மற்றும் | 77 |
| **6.** | ஆறாம் அத்தியாயம்- மனித வளங்கள் விபரங்கள் | 77 |
| 6.1 | ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் | 77 |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்'பது | 77 |
| 6.3 | மனித வளங்கள் அபிவிருத்தி | 77 |
| **7.** | ஏழாவது அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை | 84 |

# 01 அத்தியாயம்

## 1.1 அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 2289/43 ஆம் இலக்க 2022.07.22 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் " சுற்றாடல் அமைச்சு" தாபிக்கப்பட்டது. இந்த அமைச்சுக்கு நிலைபேறான அபிவிருத்தி இலங்கையின் உயிரியற் பல்வகைமை மற்றும் இயற்கை அழகைப் பாதுகாத்துக் கொண்டு இயற்கை வளங்கள் பயன்படுத்தல்; மற்றும் காடுகள்;, மரங்கள், கரையோரங்கள், ஈர நிலங்கள், கால்வாய்கள், ஆறுகள், வன உயிர;கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், குப்பைகளைத் தவிர;த்தல்; மற்றும் அகற்றுதல்;, தூய்மையான வதிவிடச் சுற்றாடல் மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்குப் பொருந்தக் கூடியவாறு சுற்றாடல் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரியதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றாடல் அமைச்சர; பதவியை கௌரவ நசீர; அஹமட் அவர்கள் வகித்து வருகின்றார;கள்.

அரசின கொள்கை மற்றும் ஏனைய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள " நிலைபேறான சுற்றாடலொன்றை " உருவாக்குவதற்காக சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இசைவானதாக சுற்றாடல் விடயத்திற்குரிய கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவு செலவுத் திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை மேற்கொள்ளல்; ஆகிய முதன்மைப் பணிகளுக்காக சுற்றாடல் அமைச்சு தலைமைத்துவம் வழங்குகின்றது.

2022 ஆம் வருடத்தினுள் காணப்பட்ட பொருளாதார மற்றும் சமூக சவால்களுக்கு மத்தியிலும் பேன்தகு சுற்றாடல் எண்ணக்கரு, பாடசாலைக் கல்வியில் இருந்து சமூகத்தினுள் மனப்பாங்கு ரீதியாக மீளமைத்தல், சுற்றாடல் சார;ந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் முறையை மீளாய்வு செய்து சுற்றாடல் நட்புறவான அடிப்படையில் அந்த செயற்பாடுகளை வழிநடாத்துதுல், சுற்றாடல் நட்பான உற்பத்தி, விநியோகம், போக்குவரத்து சேவை, உட்கட்டமைப்பு வசதிகள், நகர அபிவிருத்தி மற்றும் முதலீடு மற்றும் பொருளாதார வலய அலுவல்க ளை வழிநடாத்தலின் போது வியாபார மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளை பேன்தகு அபிவிருத்தி குறிக்கோள்களுடன் சமப்படுத்தல், சுற்றாடல் பாதுகாப்புக்காக நவீன விருத்திபெற்ற தொழில்நுட்ப வழிமுறைகளை அறிமுகம் செய்வதன் மூலம் சுற்றுசூழல் நட்புறவான மக்கள் சேவையொன்றை வழங்குதல் முதன்மைப்பணியாகும்.



காபன் குறைப்பு கூட்டுப் பொறிமுறைக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் ஜப்பானும் இலங்கையும் கைச்சாத்திட்டன

அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், வரையறுக்கப்பட்ட புளுஆடி தொழில்நுட்ப சேவைகள் தனியார் கம்பனி மற்றும் இலங்கை கிளைமட் பண்ட் பிரைவட் (லிமிடெட்) ஆகிய நிறுவனங்களுடன் சுற்றாடல் அமைச்சு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள் வேகமடைவதல்;, மக்களின் வாழ்க்கை முறைமை மாற்றமடைதல்;, காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்காக மொத்த அரச பொறிமுறையும் நிறுவன, சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப சட்டகத்தை வலுவாக்கம் செய்துகொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிலைபேறாக மற்றும் சிக்கனமாகக் கட்டியெழுப்புவதற்காக விசேட பணியொன்றை ஆற்றுகின்றது.

இந்த அறிக்கை மூலம் சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள், அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்கள் மூலம் 2022 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி மற்றும் பேணிப்பாதுகாத்தல் பணிகள் தொடர்பாக விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்று

**அமைச்சின் நோக்கு**

**“நிலைபேறாக அபிவிருத்தியடைந்த இலங்கை”**

**அமைச்சின் பணிக்கூற்று**

**இயற்கை வளங்களின் சிறந்த முகாமைத்துவத்தினூடாக சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக தலைமைத்துவம்**

# 1.3 சுற்றாடல் அமைச்சின் பிரதான பணிகள்:

⇒ நிலைபேறான அபிவிருத்திக் கொள்கைகளை வகுப்பதற்காக உபயோகப்படுத்திக் கொள்வதற்காக பங்குதாரத் தரப்பினர்களின் பங்களிப்புடன் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறையில் உள்ள பிரச்சனைகளை அடையாளம் காணுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புத் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காக பங்குதாரத் தரப்பினர்களிற்கு அறிவித்தல் மற்றும் செயற்படுவதை உறுதிப்படுத்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்கு இசைவுடைய கொள்கைகளை செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மூலோபாயங்கள் மற்றும் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன்னோடிக் கருத்திட்டத்தை மேற்கொள்ளல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்குரிய கொள்கை ரீதியான மறுசீரமைப்பு மற்றும் நிலைபேறான சுற்றாடல் எண்ணக்கரு மற்றும் ஏனைய பிரதான சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் மக்கள் அறிவூட்டல்.


⇒ இலங்கை கைச்சாத்திட்டுள்ள பல் தரப்பு சுற்றாடல் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப இலங்கையினால் ஆற்றப்பட வேண்டிய சர்வதேசப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறைக்குரிய பின்னாய்வு வழிமுறையைத் தயாரித்தல் மற்றும் பின்னாய்வின் மூலம் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தல்

⇒ கொள்கைகளை மேற்கொள்ளும் போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிய ஆய்வு நடாத்துதல், அந்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அந்த தகவல்களைப் பொதுமக்கள் உள்ளிட்ட உரிய பிரிவுகளுக்கு அனுப்புதல்.

⇒ சிறந்த சுற்றாடல் முகாமைத்துவமொன்றுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற பிரிவுகள் மற்றும் பொதுமக்களின் அர்ப்பணிப்புக்காகப் பொருத்தமதான சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கும்

## 1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம் - சுற்றாடல்



1.5. **அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் / நிறுவனங்கள்:**

- **மத்திய சுற்றாடல் அதிகார சபை**
- **புவிச் சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம்**
- **வரையறுக்கப்பட்ட** GSMB **தொழில்நுட்ப சேவை**
- **இலங்கை கிளைமட் பண்ட் (பிரைவட்) லிமிடட**

1.6 . **அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்தின் கீழ் காணப்படுகின்ற நிதியம் - இல்லை**

1.7 **வெளிநாட்டு உதவி கிடைக்கப்பெறுகின்ற கருத்திட்டங்களின் தகவல்கள் (இருப்பின்)**

| | |
|---|---|
| **அ) கருத்திட்டத்தின் பெயர்** | **1. சமூக அடிப்படை பிரவேசத்தினூடான விவசாய மற்றும் சுற்றாடல் துறை இணைந்த முகாமைத்துவம் செய்தல் கருத்திட்டம்** |
| **ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்** | **உலக சுற்றாடல் வசதிகள்** (GEF) |
| **இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு** | **ரூபா. மில்** 635.9 |
| **ஈ) கருத்திட்டக் காலப்பகுதி** | 2021 - 2024 |
| **அ) கருத்திட்டத்தின் பெயர்** | **2. பொலிக்லொரினேடட் பயிபினயில் கழிவுப் பொருட்கள் மற்றும் பொலிக்லொரினேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்களை சுற்றாடல் நட்புறவான அடிப்படையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அகற்றுதல் கருத்திட்டம்** |
| **ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்** | **ஐக்கிய நாடுகளின் தொழிநுட்ப அபிவிருத்தி அமைப்பு** UNIDO |
| **இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு** | **ரூபா. மில்.** 685.10 |
| **ஈ) கருத்திட்டக் காலப்பகுதி** | 2016-2023 |
| **அ) கருத்திட்டத்தின் பெயர்** UNIDO | **3.மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் ' இரசம் அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை தொடர;பான கருத்திட்டம்** |
| **ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்** | **ஐக்கிய நாடுகளின் தொழிநுட்ப அபிவிருத்தி அமைப்பு** UNIDO |
| **இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு** | **ரூபா. மில்.** 12 |
| **ஈ) கருத்திட்டக் காலப்பகுதி** | 2016 –2022 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 4. கல்லீரல் புற்றுநோய் நிலைமை பற்றி விசேட கவனம் செலுத்தி கல்லீரல் பாதுகாப்பு சிகிச்சை முறையொன்றாக இரசம் அடங்கிய "லோகநாதரச" மருந்துப் பாவனை தொடர்பான ஆய்வு |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | சுவிட்டசல்லாந்து அரசு |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 4.81 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2022 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 5. இரசம் உள்ளடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுப்பொருட்களைக் குறைப்பதற்கான தேசிய திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம். |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | மினமாட்டா மாநாட்டின் விசேட சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் . |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 32.15 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2023 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 6. கடல் கழிவுப் பொருட்கள் மற்றும் நுண் பிளாஸ்ரிக், பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் சுற்றாடல் நட்புறவான அடிப்டையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் உருவாக்கத்தைக் தவிர்த்தல் மற்றும் குறைத்தல். |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர் நிறுவனம் (NORAD) |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 10.37 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2022 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 7.ஆசிய பசுபிக் நாடுகளில் ஒரு முறை மாத்திரம் பயன்படுத்திய பின்னர் வீசப்படுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் அதன் கழிவுப் பொருட்களை சுற்றாடல் நட்புறவானவாறு முகாமைத்துவம் செய்தல் தொடர்பான திறன் விருத்தி. |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர; நிறுவனம் (NORAD) |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 5.4 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2023 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 8. ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் அறிக்கையிடல் கருத்திட்டம் |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | ஐக்கிய நாடுகளின பாலைவனமாதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் செயலாளர் அலுவலகம் |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 11.5 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2019-2023 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 9 சுற்றாடல் மற்றும் சமூக அடிப்படையில் உணர் திறன்மிக்க விவசாய சுற்றாடல் முறைமையை தாபித்தல் ஊடாக நிலம் அழிவடைவதனை குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தி ஆரோக்கியமான விவசாயிகள் மற்றும் செழிப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கருத்திட்டம். |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | உலக சுற்றாடல் வசதிகள் (GEF) |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 383 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2023 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 10. இலங்கையில் பேன்தகு மற்றும் வினைத்திறன் கொண்ட மின் இடப்பெயர்வு முறைமையொன்று தொடர்பான கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயார் செய்தல். |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | உலக சுற்றாடல் வசதிகள் (GEF) |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில். 8.5 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2021 - 2022 |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 11. இலங்கையினுள் மொன்ரியல் அமைப்பின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | பல் தரப்பு நிதியம் MLF |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | ரூபா. மில்.. 35 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் |

| | |
|---|---|
| அ) கருத்திட்டத்தின் பெயர் | 12. உயிரியல் பாதுகாப்பு தொடர்பான கார்டஜீனா அமைப்புக்கு இனங்க தேசிய உயிரியல் பாதுகாப்பு தொடரடபான செயல் சட்டகத்தை மேற்கொள்ளல் கருத்திட்டம் |
| ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | உணவு விவசாய அமைப்பு FAO |
| இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு | அ. டொலர் . 2,365,964 |
| ஈ) கருத்திட்டக் காலப்பகுதி | 2016—2022 |

## 02. அத்தியாயம் - முன்னேற்றம்

## 2.1 சுற்றாடல் அமைச்சின்; ஒவ்வொரு பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

### 2.1.1.சுற்றாடல் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் அமுலாக்கல் திட்டம்

#### தேசிய சுற்றாடல் கொள்கை

2003 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் கொள்கை மற்றும் மூலோபாயத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் தேசிய மற்றும் பூகோள ரீதியில் இடம் பெற்று வருகின்ற அபிவிருத்தி நடைமுறைகளுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய சுற்றாடல் சவால்களை வெற்றி கொள்வதற்கு இந்தக் கொள்கையை இற்றைப்படுத்த வேண்டிய தேவைப்பாடு தோன்றியது. இந்தப் பின்னணியில் "நாட்டை உருவாக்குவோம் - சுபீட்சத்தின் தொலை நோக்கு" சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தின் மாற்றமடைந்து வருகின்ற முன்னுரிமைகள், எழுகின்ற புதிய சவால்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தேசிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கொள்கைகளின் தூர நோக்கில் மாற்றங்களைச் செய்தல் பற்றிய விடயங்கள் சுற்றாடல் அமைச்சு, ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் விசேட நிபுணர்களின் ஆலோசனையுடன் பொது மக்களின் கருத்துக்களும் பெறப்பட்டதன் பின்னர் தயாரிக்கப்பட்ட தேசிய சுற்றாடல் கொள்கையானது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. 2022.06.20 ஆம் திகதி தேசிய சுற்றாடல் கொள்கைக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. 2022.12.19 ஆம் திகதி கௌரவ சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் தேசிய சுற்றாடல் கொள்கை வெளியீட்டு வைக்கப்பட்டது.




#### சுற்றாடல் உணர்திறன் கொண்ட பிரதேசக் கொள்கை

சுற்றாடல் ரீதியாக உணர்திறன் கொண்ட பிரதேசங்களில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் நிலையான காணிப் பாதுகாப்புக்களில் காலநிலை மாற்றங்களின் போது சாதாரண நிலைக்கு மாற்றுவதற்காக ஒருங்கிணைந்து அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தியின் போது இயற்கை மூலதனத்தைப் பயன்படுத்துவதற்கான இயற்கை சுற்றாடல் சார்ந்த தீர்வாக இலங்கையின் சுற்றாடல் உணர்திறன்மிக்க பிரதேசங்கள் பற்றிய தேசியக் கொள்கைக்கான அமைச்சரவை அங்கீகாரம் 2022.11.21 ஆம் திகதி பெறப்பட்டதன் பின்னர் அச்சிடப்பட்டது.

#### தேசிய சுற்றாடல் செயல் திட்டம்

தேசிய சுற்றாடல் செயல் திட்டத்தின் (NEAP) பிரதானமான நோக்கம் சுற்றாடல் பிரச்சினைகளை அனைத்து துறைகளின் அபிவிருத்தி திட்டங்களில் ஒருங்கிணைக்கப்புச் செய்வதாகும். இதனை அடைந்து கொள்வதில் சுற்றாடல் அமைச்சினால் 2022 - 2030 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சுற்றாடல் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தேசிய சுற்றாடல் கொள்கைக்கு இணக்கியதாக மூலோபாயங்கள் மற்றும் செயல் திட்டத்துடன் கூடிய தொழிற்பாட்டுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2022.12.05 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சுற்றாடல் சவால்கள் அடையாளப்படுத்துகின்றது. தேசிய சூற்றாடல் செயல் திட்டம் திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

| சூழல் சவால்களை உள்ளடக்கும் தொனிப் பொருட்கள் |
|---|
| 1. வளித் தர முகாமைத்துவம். |
| 2. . உயிரியல் பல்வகைமைத் தன்மைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு |
| 3. நிலைபேறான தன்மைக்கான காலநிலை நடவடிக்கைகள் |
| 4. கரையோர மற்றும் கடல் வளங்களை நிலைபேறானவாறு பயன்படுத்துதல். |
| 5. நிலைபேறான காணி வளங்கள் முகாமைத்துவம். |
| 6. மொத்தக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் |
| 7. இணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம். |
| 8. . நகர சபை மனித குடியேற்றங்களின் சுற்றாடல் முகாமைத்துவம். |
| 9. பசுமைக் கைத்தொழில் |

#### சதுப்பு நில மூலோபாய செயல் திட்டம்

இலங்கையில் சதுப்புநில / கண்டல் சுற்றாடல் முறைமைகளின் மீள் உருவாக்கத்திற்கான தேசிய வழிகாட்டல்கள் மற்றும் இலங்கையின் கண்டல் சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு தொடர்பான தேசிய மூலோபாய செயல் திட்டம் உரிய பங்குதார நிறுவனத்தின் மற்றும் துறைசார் அறிஞ்ஞர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

### இலங்கையில் இலத்திரனியல் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல்


இலங்கையில் இலத்திரனியல் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான செயலமர்வொன்று 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் இலத்திரனியல் கழிவுபொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கான தேசிய கொள்கையை தயாரித்தல் மற்றும் இலங்கையில் இலத்திரனியல் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதிற்காக பொருளாதார ரீதியாக சாத்தியமான, சுற்றாடல் நேயமிக்க மற்றும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க தயாரிப்பாளரின் விரிவான பொறுப்பை (EPR) செயற்படுத்துவதாகும்.

### பசுமைப் பெறுகை தேசிய கொள்கை

சுற்றாடல் தாக்கங்களைக் குறைக்கின்ற பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளைத் தெரிவு செய்து கம்பனியொன்றினால் அல்லது அமைப்பொன்றினால் தமது உற்பத்திகளின் உற்பத்திச் சக்கரத்தின் பல்வேறுபட்ட கட்டங்களில் ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன் நிதி அமைச்சின் இணக்கப்பாடு கிடைத்த பின்னர; இறுதி பசுமைப் பெறுகை கொள்கை வரைவு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர;ப்பிக்கப்பட்டதோடு அமைச்சரவையினால் கொள்கையை மேலும் ஆராய்ச்சு பார;ப்பதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது.

## 2.1.2 இலங்கையின் உயிரியல் பல் வகைமைப் பாதுகாப்பு.

தாவரங்கள் தொடர்பான தேசிய சிவப்புத் தரவுச் சான்றிதழ் / ஆவணம் இலங்கையில் பறவைகளின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தேசிய சிவப்புத் தரவுச் சான்றிதழ் / ஆவணம் வெளியீடு 2022 நவம்பர் 25 பறவைகள் தொடர்பான விசேட நிபுணர்கள் குழுவின் தொழில்நுட்ப உதவியுடன் உயிரியல் பல்வகைமைப் பிரிவினால் இந்த நூல் தயாரிக்கப்பட்டது. இலங்கையில் பறவை இனங்களின் பல்வகைமை, உள்ளார்ந்த தன்மை போன்றே அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் போது மற்றும் நாட்டின் பாதுகாப்புத் திட்டத்தை வகுக்கும் போதும்தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.




இலங்கையில் பறவைகளின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தேசிய சிவப்புத் தரவுச் சான்றிதழ்/ ஆவணம் வெளியீட்டு விழா கௌரவ சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜசிங்க அவர்களின் தலைமையில உரிய தரப்புக்கள் மற்றும் கல்வியலாளர்களின் பங்களிப்புடன் 2022 நவம்பர் 25 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்டது.



### இலங்கையின் கண்டல் தாவர (சதுப்புநில) சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு

இலங்கையின் கண்டல் தாவர இனங்களை அடையாளங்காணல் மற்றும் சதுப்புநில சுற்றாடல் முறைமைகளின் மீள் உருவாக்கத்திற்கான தேசிய வழிகாட்டல் பயன்படுத்தும் முறை தொடர்பான இருநாள் வதிவிடச் செயன்முறைப் பயிற்சிப்பட்டறையொன்று 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் தங்கொட்டுவ மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் கம்பஹா மாவட்டத்தின் வனப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது.



## 2.1.3 காலநிலை மாற்ற சவால்களை வெற்றிகொள்ளல்

### தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பை (NDCs) இற்றைப்படுத்தல்

2021 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் UNFCCC இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளுக்காகவும் தயாரிக்கப்பட்ட அமுலாக்கல் திட்டம் தயாரித்தல் நிறைவடையும் கட்டத்தில் உள்ளது. பிரிவுகளுக்கான திட்டங்கள் மற்றும் பின்னாய்வு குழுக்களை தாபிக்கப்பட்டுள்ளதோடு.

தொடர்புபட்ட பங்குதாரர்களுடன் இணைப்பு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டன. நீர்ப் பிரிவு, மின்சார/ சக்திப் பிரிவு, கரையோரப் பிரிவு ஆகியவற்றின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வைக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. விவசாயத் துறைக்காக NDC செயற்படுத்துவதற்கான விரிவான செயல் திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. கடற்றொழில் துறையின் FAO/ NARA இன் NDC செயற்படுத்தல் வசதிகள் தொடர்பான செயலமர்வினுள் கலந்து கொண்டு உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இவ்வருடத்தில் இதற்காக செயற்படுத்தல் மற்றும் பின்னூட்டல் செயற்பாடுகள் திட்டமொன்றைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு 2021, 2022 ஆம் ஆண்டுகளில் தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு நடவடிக்கைகளுக்கான முன்னேற்ற அறிக்கை மற்றும் பச்சை வீட்டு வாயு வெளியீட்டின் அளவும் அளவிடப்பட்டுள்ளது.

### காலநிலைக்கு ஏற்றவாறு மனித குடியிருப்புக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் வழிகாட்டல்கள.

அனைத்து பங்குதாரர்களினதும் பங்கேற்புடன் கருத்துக்கள்/ முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லுபடித்தன்மையை உறுதிப்படுத்துவதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டல்களை கொள்கைகள் வகுப்பாளர்கள்,, செயற்படுத்துநர்கள், அவதானத்திற்கு உட்பட்ட சமூகத்தினர் ஆகியவர்கள் கையேடாகப் பயன்படுத்த முடியும்.

### ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையில் ஒன்றிணைக்கப்பட்ட காபன் வரவு பொறிமுறை Joint Crediting Mechanism - JCM செயற்படுத்தல்.

இப் பொறிமுறையின் மூலம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் அல்லது தனியார் துறைதொழில்நுட்ப பங்களிப்பு வழங்குகின்றது ஒன்றிணைக்கப்பட்ட காபன் வரவு பொறிமுறையை அமுல்படுத்துதலின் கீழ் காபன் புகை வெளியேற்றத்தைக் குறைக்கக்கூடிய முன்னணித் தொழில்நுட்பம் மற்றும் புதிய உற்பத்தி முறைகள் அறிமுகம் மற்றும் அந்த கருத்திட்டங்களின் நிர்மாணம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக்கொள்ள முடிகின்றமை இச்செயற்றிட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெறப்படக்கூடிய நன்மைகள் ஆகும். மேலும்> இலங்கையில் இந்த பொறிமுறையை அமுலாக்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையில் ஒன்றிணைக்கப்பட்ட காபன் வரவு பொறிமுறையை (JCM) செயற்படுத்துவதற்கான ஒத்துழை வழங்குவதற்கான உடன்பாடுக்காக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் ஜப்பானிய தூதுவர் ஆகியோர் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

### காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்குப் பழக்கப்படுவதற்கான சுற்றாடல் நட்புறவான தொழில்நுட்ப வளர்ச்சி

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சுற்றாடலுக்கு இணக்கமான /நட்புறவான தொழில்நுட்ப முறைகளை ஊக்குவித்தல் மற்றும் முன்னேற்றுவதற்காக தொழில்நுட்பப் பரிமாற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு Climate Technology Centre and Network மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் நீர்த் துறையில் உள்ள தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதாக செயற்றிட்டங்கள் முன்மொழிவுகள் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று உரிய உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இணைய வழித்தொழிநுட்ப முறையின் கீழ் நடாத்தப்பட்டது.

காலநிலை மாற்றங்கள் பற்றி அறிவுறுத்துவதற்காக water Resources and Climate Change என்ற பெயரில் துண்டுப் பிரசுரமொன்றும் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

### காநிலை மாற்றங்களை மட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய விசேட நிபுணர; குழு

பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் செயற்பாட்டின் போது வழிகாட்டல்களை வழங்குவதற்காக தேசிய நிபுணர் குழு நிறுவப்பட்டுள்ளது. முன்னேற்றத்தை அறிக்கையிடும் காலப்பகுதியினுள் காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படும் குழு மற்றும் காலநிலை மாற்றங்களுக்கான பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தகைக் குறைக்கும் விசேட நிபுநர;கள் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு,

## பசுமைக் காலநிலை நிதியம் ( GCF ) தொடர்;பான செயற்பாடுகள்

காலநிலை மாற்றங்களின் காரணமாக பாதகமான விளைவுகளை உயர்வடைந்துள்ள அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது. சுற்றாடல் அமைச்சின் பசுமை காலநிலை நிதியம் தேசிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகார சபை (NDA) ஆகும் இதன் மூலம்,

- 2024 - 2027 இற்காக GCF மூலேபாயத்திட்டம் மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்துவதற்கான கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் வழங்கப்பட்டது.
- இலங்கைக்காக E - mobility திட்டமொன்றை விருத்தி செய்வதற்காக பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (French Agency for Development) உடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.
- Cooling Facility கருத்திட்டம் தொடர்பில் உலக வங்கி அலுவலர்களுடன் கூட்டம் நடாத்தப்பட்டது.
- Energy Efficiency in Buildings (PEEB Cool) நிகழ்ச்சித்திட்டம் மற்றும் Global Fund for Coral Reefs Investment Window நிகழ்ச்சித் திட்டத்திற்காக பசுமை காலநிலை நிதியத்தின் தேசிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக இணக்கப்பாட்டை வெளிப்படுத்துவதற்குத் தேவையான கடிதம் மீண்டும் வெளியிடப்பட்டது.
- பெயர் குறிக்கப்பட்ட நேரடி நிதி பிரவேச நிறுவனங்களில் இருந்து, DFCC வங்கி இறுதிக் கட்டத்தில் உள்ளதோடு அந்த வங்கிக்காக GCF சபையின் அனுமதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக பசுமை காலநிலை நிதியத்திடம் எழுத்து மூலம்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
- தேசிய GCF கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுவைத் (NPCC) தாபித்தல் மற்றும் முதலாவது கூட்டத்தை நடாத்துதல்.

## தேசிய அங்கீகாரம் பெற்ற அதிகார சபையின் (NDA)இரண்டாம் தயார; நிலை கருத்திட்டத்தை மேற்கொள்ளல்.

தேசிய அங்கீகாரம் பெற்ற அதிகார சபையின் (NDA) இரண்டாம்;; தயார் நிலை கருத்திட்டம் 2021 ஆம் ஆண்டின் நிதி உதவி இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது .உலக நீர;ப் பங்குடமை (GWP) உடன் இலங்கையினால் சமர;ப்பிக்கப்பட்ட இரண்டாம் தயார்; நிலை கருத்திட்டம் தொடர;பான முன்மொழிவு பசுமை காலநிலை நிதியத்தின (GCF) இற்கு சமர;ப்பிக்கப்பட்டது.

இலங்கையின் கீழ் நீரேந்து பகுதிகள் மற்றும் கரையோர வலயம் தொடர்;பில் விசேட கவனம் செலுத்தி காலநிலை நிதியை உறுதிப்படுத்துவதற்காக மூலோபாயத்தை விருத்தி செய்தல் மற்றும் இயலளவை கட்டியெழுப்புதற்காக இரண்டாம் தயார; நிலை கருத்திட்டம் சுற்றாடல் அமைச்சுக்கு மற்றும் அரசாங்கம், சிவில் சமூகம், கலை மற்றும் தனியார; பிரிவுகளின் ஏனைய தரப்பினர்;களுக்கு உதவி செய்யும் அதன் இரண்டாம் தயார்; நிலை கருத்திட்டத்தின் முதுலாது வழிநடாத்தல் குழு நடாத்தப்பட்டது.

## காலநிலை மாற்றங்களுக்குப் பழக்கப்படுதல் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம்

பிரதேசங்களில் மக்கள் மத்தியில் காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படக் கூடிய ஆற்றலை மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 05 பிரதேச செயலகங்களினுளள்; கிராமங்களில் இந்நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுகிறது.

குறிப்பாக காலநிலை மாற்றங்களின் பாதகமான விளைவுகளின் விளைவாக வரட்சி காரணமாக கிராமியச் சமூகத்தினர் முகம் கொடுக்கும் குடிநீர் தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்யும் பிரச்சினைகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் நெற்பயிர்ச் செய்கையில் காலநிலை மாற்றங்களின் பாதகமான விளைவுகள் ஆகியன பற்றிக் கவனம் செலுத்தி மிகவும் ஆபத்துக்கு உட்படுகின்ற 05 மாவட்டங்களை இனங்கண்டு, அந்த மாவட்டங்களில் உள்ள 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் காலநிலை மாற்ற இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கும் ஆபத்துக்களின் பிரகாரம் தரப்படுத்தலின் பின்னர் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு- எகிப்து Sharm - El Sheikh

முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் காலநிலை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக Conference of Parties என அழைக்கப்படுகின்ற ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு 1995 முதல் வருடாந்தம் நடத்தப்படுகின்றது. இதற்கமைய 2022 ஆம் ஆண்டு COP 27 நவம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 18 ஆம் திகதி வரை எகிப்து Sharm - El Sheikh இல் நடந்தேறியது

இந்த COP 27 இன் விளைவாக உலகளாவிய வெப்பநிலை உயர்வடைவதற்கு முன்னர் தொழில்நுட்ப மட்டத்தைவிட செல்சியஸ் 1.5 பாகை வரை மட்டுப்படுத்துவதற்குள்ள அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் முடிவுகளை வழங்குவதற்கு நாடுகளால் முடிந்தது.

இந்தத் தீர்மானக் கோவையின் மூலம் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை வெட்டி விடுவதற்கு /பதிவழிப்பதற்கு மற்றும் காலநிலை மாற்றங்களிலிருந்தான தவிர்க்க முடியாத விளைவுகளுக்கு இணங்குவதற்கு மற்றும்

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அபாயங்களுக்கு உட்படக்கூடிய
இனத்திற்கான நட்டம் மற்றும் சேதங்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கான நிதியமொன்றை நிறுவி செயற்படுத்துவதாகும்.

Accelerating Industries Climate Response in Sri Lanka)

**கருத்திட்டம்**

**கைத்தொழில் உரையாடல் -**

இந்த சந்தர்ப்பத்திற்கு AICRSL ( Accelerating Industries Climate Response in Sri Lanka ) கருத்திட்டம் மூலம் திட்டமிடப்பட்ட கைத்தொழில் உரையாடல் தொடர் ஒன்றின் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமென்பதோடு, ஐரோப்ப சங்கம் மற்றும் UNIDO இடையில் இல. ரூபா. 2.8 பில்லியன் ( யரோ 7.56 மில்லியன் ) பங்குடமையின் கீழ் இந்த முயற்சி திட்டமிடப்பட்டிருப்பது 2030 ஆண்டாகும் போது நாட்டின் கைத்தொழில் பிரிவுக்குப் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை (GHG) நூற்றுக்கு 7 இனால் பதிவழிப்பதற்குத் தேவையான பின்னணியை வகுப்பதற்காகவாகும்




**ஆம் வழிநடாத்தல் குழுக் கூட்டம் மற்றும் MRV தொழில் நுட்பக் குழுக் கூட்டம் -**

கருத்திட்டத்தின் முதலாவது வழிநடாத்தல் குழுக் கூட்டம் செயலாளர் அவர்களின் தலைமையில் 2022 செப்தெம்பர் 12 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்டது. முதலாம் மற்றும் இரண்டாம் MRV தொழில் நுட்பக் குழுக் கூட்டம் 2022 செப்தெம்பர் 12 மற்றும் 2022 செப்தெம்பர் 22 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டது. .

## 2.1.4. வாயு வளங்கள் முகாமைத்துவம்

**இலங்கையின் வீட்டு வளித் தரத்தன்மைக்கான வழிகாட்டியொன்றை தயாரித்தல்.**

தூய வளி செயல் திட்டம் 2025 ஆம் ஆண்டிற்கான வீட்டு வாயு மாசாக்கி தொடர்பான ஏற்கத்தக்க பெறுமதி, வீட்டு வாயு மாசாக்கி காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார தாக்கங்கள் தொடர்பான தகவல் மற்றும் வீட்டுப் வளியின் தரத்தன்மையில் உள்ள பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட இலங்கையின் வீட்டு வளித்தரத்தை மேம்படுத்துவதற்காக நிபுநர்கள் குழுவின் பங்கேற்புடன் வழிகாட்டல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டி சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மின் புத்தகமாக (E-Book) வெளியிட்டு வைத்தல் கௌரவ. சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் 2022.10.31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது




**கொழும்பு நகர அதிகாரப் பிரதேசத்தில் வளி நிலைமை முகாமைத்துவம் தொடர்பான சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மூலோபாயங்களையும் கொள்கைகளையும் விருத்தி செய்வதற்கான கொள்திறன் அபிவிருத்தி சம்பந்தமான செயற்றிட்டம்**

வளியின் தரத்தன்மை மிகவும் உணர்வுபூர்வமான ஒரு செயற்பாடு ஒன்றாகும், இலங்கையில் வளியின் தரத்தை தீர்மானிப்பதற்காக மூன்று தன்னியக்க வளி நிலைமை அளவீட்டு உபகரணங்கள் பத்தரமுல்ல, கொழும்பு மற்றும் கண்டி நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இதன் மூலம், வளியில் காணப்படும் $PM_{-10}$, $PM_{-2.5}$,$NO_x$, $SO_x$, CO, மற்றும் நில மட்டத்தின் ஓசோன் போன்ற பாதகமான வளித் மாவாக்கிகள் சம்பந்தப்பட்ட தரவுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இங்கு இலங்கையின் சில நகரப் பிரதேசங்களில் சில தினங்களில் வளியில் $PM_{10}$ மற்றும் $PM_{2.5}$ ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியைவிட அதிகமானதாக இருப்பது உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது

இது தொடர்பில் கவனம் செலுத்தி பிரான்ஸ் அரசாங்கத்தினால்

கொழும்பு நகரப் பிரதேசத்தில் வளித்தர முகாமைத்துவம் தொடர்பான சாட்சியங்களின் அடிப்படையில் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளின் விருத்திக்கான திறன் விருத்தி தொடர்பான செயற்றிட்டமொன்றை செயல்படுத்துவதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இங்கு இலங்கையின் பிரதிநிதியாக பிரான்ஸ் அபிவிருத்தி முகவராக (AFD) செயற்படுகிறது

மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயற்றிட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்டதோடு 2022.12.31 ஆம் திகதி வரையில் இந்த கருத்திட்டத்திற்கான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.1.5. சுற்றாடல் திட்டங்கள் மற்றும்

### ஒருங்கிணைந்த நீர் வள முகாமைத்துவம்

தேசிய நீர்ப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் நீர் வளங்களை நிலைபேறாக முகாமைத்துவம் செய்வதற்கான புத்திஜீவிகள் மற்றும் காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் உட்பட தொடர்புடைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி இணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவத்தை அமுல்படுத்துவதற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் செயற்பாடுகள், உணவு மற்றும் விவசாய அமைப்புகளின் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவதற்கான திறன்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆம் திகதி சர்வதேச நீர் மாநாடு 2022 இற்காக ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான அமர்வொன்று நடாத்தப்பட்டது.

### சுற்றாடல் முகப்புச் சீட்டு (லேபல்) நிகழ்ச்சித் திட்டம்

சுற்றாடல் முகப்புச் சீட்டு என்பது நிலைபேறான அபிவிருத்தியின் 12 ஆவது நோக்கமான நிலையான நுகர்விற்கும் உற்பத்திக்கும் உதவக்கூடிய முக்கியமான கருவியாகும். உலகளாவிய சுற்றாடல் லேபல் வலையமைப்புக்கு (Global Eco Label Network) அமைய சுற்றாடல் முகப்புச் சீட்டிடல் என்பது சுற்றாடல் செயலாற்றுகையை உறுதிப்படுத்தல் மற்றும் முகப்புச்சீட்டிடுவதற்காக
உலக நாடுகள் முழுவதிலும் பின்பற்றப்படுகின்ற தன்னார்வ முறையாகும்.. சுற்றாடல் முகப்புச்சீட்டிடுவதற்கு இலங்கையில் நம்பகமான மற்றும் தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டகம்/ வழிமுறையொன்று இல்லை. SLAB மற்றும் SLSI உட்பட முக்கிய பங்குதாரர்களுடன் இலங்கையில் சுற்றாடல் முகப்புச் சீட்டிடுவதற்காக தேசிய கட்டமைப்பு/சட்டகம் வரைவு செய்யப்பட்டது. வர்த்தகம், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப விடயப் பொறுப்பு அமைச்சுகளுக்கு இச் சட்டகம் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. 2022.11.21 ஆம் திகதி இத் தேசிய சட்டகத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### பசுமைக் கணக்கீட்டு நிகழ்ச்சித் திட்டம்.

பசுமை கணக்கிட்டு பொறிமுறையின் கீழ் 2022 ஆம் ஆண்டில் நீர்க் கணக்குகளைத் தயாரிப்பதற்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அடையாளம் காணப்பட்ட பங்குதார நிறுவனத்தினூடாக தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து நீர்க் கணக்குகளைத் தயாரிப்பதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் உடன்பாடுதெரிவித்துள்ளது.

### பசுமை உற்பத்தியை ஊக்குவித்தல்; மற்றும் பசுமைத் தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்.

சுற்றாடல் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட பசுமைக் கிராமங்கள்
நிகழ்ச்சித்திட்டத்துடன் செயற்படுகிறது. இதன் கீழ் ஊவா, சப்பிரகமுவ, வடமேல் மாகாணங்களை உள்ளடங்கும் வகையில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட மாகாணங்களுக்கு உரியதாக பசுமை உற்பத்தியாளர்களின் தகவல்கள் பெறப்பட்டு தரவு சேகரிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்தத் தரவுகளுக்கு அமைய பசுமை உற்பத்தியாளர்களுக்கு நிறுவன ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது.

### சுற்றாடல் ரீதியாக உணர்திறன்கொண்ட பிரதேசங்களைப் பாதுகாத்தல்

- இலங்கையில் மற்றும் முகாமைத்துவ முறைமை தேவையான சுற்றாடல் உணர்திறன்மிக்க பகுதிகளை இனங்காண்பதற்கு இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்துசெயற்படுவதோடு அவைகளை வரைபடமாக்கல் வேலைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- ESA மூலோபாய செயல்/ நடவடிக்கைத் திட்டமொன்று வரைவு செய்யப்பட்டுள்ளது.
- கங்கேவாடிய மேற்பார்வை மற்றும் சுற்றுலா பார்வையாளர் நிலையம் ஒன்றை தாபிப்பதற்கான கட்டிடத் திட்டத்தை தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் அளவு விலைப்பட்டியல் (BOQ)வுக்குத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டது. மண் பரிசோதனை முடிவுறுத்தப்பட்டுள்ளது.
- காணா பயன்படுத்தல் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், விவசாய அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் நில அளவைத் திணைக்களம் ஆகியவற்றுடன் புத்தளம் மாவட்டத்தில் 10 சமவெளிகள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
- புத்தளம் மாவட்டத்தில் 10 நாற்று மேடை பயிற்றுவிப்பாளர்களுக்கு ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- இரத்தினபுரி மற்றும் மொனராகலை, காலி,களுத்துறை மாவட்டங்களில் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ESA இணையவழி

## 2.1.6. சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாடு மற்றும் இரசாயனத் திரவங்கள்

உணவு வீண் விரையம் மற்றும் உணவுப் கழிவுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உணவு மீள் விநியோக அமைப்புகள் மற்றும் உணவு வங்கிகளுக்கான தேசிய வழிகாட்டல் வரைவு தயாரிக்கப்பட்டது.

- இலங்கையில் உணவுப் பிரச்சினை நிலைமையைக் கருத்திற்கொண்டு போது உணவுக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் ஹோட்டல் துறைக்கான அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று 2022.12.13 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்டது

- உணவு கழிவுகளைக் குறைப்பதற்கான ஸ்ரிகர் ஒன்று உணவகங்களுக்கு விநியோகிப்பதற்காக அச்சிடப்பட்டது.




- பொலன்னறுவை ஜயந்திபுர வித்தியாலயத்திற்காக "ஹரித்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டம் 2022/12/23 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இங்கு உணவுக் கழிவுகளைக் குறைத்தல் மற்றும் உணவு வங்கிகளை நிறுவுவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

- உணவு கழிவுகள் முகாமைத்துவம் சம்பந்தமாக இலங்கையின் பிரதான சிறப்பு வியாபார நிலையங்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை பரிமாறும் கூட்டம் ஒன்று 12/12/2022 அன்று நடாத்தப்பட்டது.



- " உணவு விரையமாதல் மற்றும் உணவுக் கழிவுகளைக் குறைத்தல் தொடர்பாக அறிவுறுத்தும் சர்வதேச தின " வைபவத்தோடு இணைந்ததாக உணவு வங்கியொன்று சுற்றாடல் அமைச்சின் புதிதாக தாபிக்கப்பட்டது.

உலக ற்றாடல் வசதிகளின் 07 ஆம் சுற்றின் கீழ் செயற்படுவதற்கு குறித்துரைக்கப்பட்ட நீண்ட காலம் நிலைத்திருக்க கூடிய காபன் மாசுகள் தொடர்பாக தேசிய அமுலாக்கல் திட்டத்தை இற்றைப்படுத்தல் மற்றும் சுகாதார சேவைக் கழிவு மற்றும் இரசம் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்" மீதான செயற்றிட்டம் பங்குதாரர்களுக்கான கூட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறை யொன்று என்பன 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

தியவன்னா ஓயாவின் நீரின் தரத்தை மீளமைத்தல் தொடர்பான செயலணியின் 2 குழுக் கூட்டங்கள் 2022.02.08 மற்றும் 2022.04.01 ஆகிய இரு தினங்களில் இடம்பெற்றதுடன் 9 நீர்ப் போசாக்குப் பகுதிகளில் நிரந்த மற்றும் நிரந்தரமற்ற மாசாக்கி மூலங்கள் இனம்காணப்பட்டதோடு நிரின் தன்மையைப் பரீட்சித்தல் மற்றும் குளக்கரை ஓரங்கள் மீளமைக்கப்பட்டு வருகின்றன.

2022 சர்வதேச நீர் மாநாட்டினைக் கொண்டாடுவதற்காக இலங்கைப் பாராளுமன்ற குளத்தில் எல்கீ பரவியதால் மாசடைதுள்ள நீரின் தரத்தன்மையை சாதாரண நிலைக்கு மாற்றுதல் தொடர்பான தொழில்நுட்ப அமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

கந்தக்காடு, வவுனியா மற்றும் நவசேனபுரவில் அமைந்துள்ள போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு முகாம்களில் பிளாஸ்டிக் முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

## 2.1.7. நில வளங்கள் பாதுகாப்பு

### குண்டசாலைப் பிரதேசத்தில் நிருமாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலைபேறான நில முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மாதிரிச் செயற்றிட்டம் ( கட்டம் - 01 நிர்மாணம் மற்றும் மாதிரி )

முன்மொழியப்பட்ட நில மாதிரி இலங்கையில் முதலாவது தடவையாக கட்டப்பட்டது ஏற்கனவே முதலாவது காலாண்டில் இச் செயற்றிட்டத்திற்காக 1 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு முதலாம் காலாண்டுக்குரிய வேலைகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையத்தின் பராமரிப்பு விவசாயத் திணைக்களத்தின் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது



**நிலைபேறான நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான தேசிய அமுலாக்கல் திட்டத்தை தயாரித்தல்**

நிலைபேறான நைதரசன் முகாமைத்துவம் தொடர்புடையதாக தேசிய அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கும் பிரதான பணியின் கீழ் நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான தொடர்புடைய தரப்பினரை இனங்கண்டு அந்த நிறுவனங்கள் மற்றும் உப குழுக்களை அமைத்தல் மேற்கொள்ளப்பட்டன.

நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான நிறுவனங்களை அறிவுறுத்தும் செயலமர்வொன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ். பீ. நிஷ்ஷங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மேலும், பேராசிரியர் மார்க் சர்டன் அவர்களின் தலைமையில்
உலகளாவிய நைதரசன் முகாமைத்துவம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. தேசிய செயல் திட்டத்தை தயாரிக்கும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் நைதரசன் முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் இனங்காணப்பட்டுள்ள வருடாந்த, நடுத்தர மற்றும் நீண்டகால அமுலாக்கல் திட்டங்கள்/முன்மொழிவுகள் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது.

## 2.1.8. சுற்றாடல் கல்வி மற்றும் அறிவுறுத்தல்

சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் கீழ், மாணவர்கள், அரச நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் சுற்றாடல் உணர்திறன், சுற்றாடல் தொடர்பான அறிவை மேம்படுத்தல் தொடர்பாக அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்றது.

இங்கு சுற்றாடல் உணர்திறன் கொண்டவர்களை உருவாக்குவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைப்பது அடிப்படை நோக்கமாகும். 2022.02.03 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று விதாரன்தெனிய தெனேகம ஆரம்பப் பாடசாலையில் நடாத்தப்பட்டது



மதுவுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்துகின்ற வவுனியா, கந்தக்காடு, நவசேனபுர புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள கைதிகளுக்கு சுற்றாடலின் முக்குயத்துவம் தொடர்பான அறிவை வழங்கி சுற்றாடல் நட்புறவு மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் பிரசைகளை உருவாக்குவதற்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட 2022.06.08 ஆம் திகதி தொடக்கம் 2022.06.10 ஆம் திகதி வரை 300 கைதிகளின் பங்கேற்புடன் இந்த நிகழ்ச்சித்திட்ட நடாத்தப்பட்டது.



சுற்றாடல் அமைச்சுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சுற்றாடல் விடயங்கள் தொடர்பான அறிவினை விரிவுபடுத்துவதற்காக நடாத்தப்பட்ட வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. விடுதிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் இதன் கீழ் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், வட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம், தென் மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியதாக 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சொபா சலன குறுந்திரைப்படப் போட்டி மற்றும் சொபா சேயா சுற்றாடல் புகைப்படப் போட்டியை நடாத்துதல்.**

இளம் சினிமாக்காரர்களிடையே சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான மனப்பான்மையை விருத்தி செய்து அதன் மூலம் சமூகத்தின் மத்தியில் சாதகமான உரையாடலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உலக சுற்றாடல் தினத்திற்குச் சமாந்தரமாக நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக "சொபா சலன" குறுந்திரைப்படப் போட்டித் தொடர் “இயற்கையை கலையாக நோக்குவோம்” என்ற தொனிப்பொருளின் கீழ் “சாபா சேயா”

சுற்றாடல் புகைப்பட போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டது. "சொபா சலன"குறுந்திரைப்படப் போட்டிக்குச் சமாந்திரமாக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை, போட்டித் தொடர் ஆகியவற்றின் நடுவர் குழாத்தின் அங்கத்தவர்கள் வளவாளர்களாகப் பங்களிப்பு வழங்கியதோடு 70 விண்ணப்பதாரர்களின் பங்கேற்புடன் அமைச்சின் கேட்போர் கூடத்தில் செயலமர்வு ஒன்று நடைபெற்றது. இந்த செயலமர்வுக்கு சமாந்திரமாக zoom தொழில்நுட்பத்தின் மூலம் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் படைபாளிகள் கலந்து கொண்டனர்.



**சுற்றாடல் நேயமிகு சமூகத்தை உருவாக்கும் நோக்கில் 2022 ஆம் ஆண்டில் சொபா சஞ்சிகை வெளியிடப்பட்டது.**

தேசிய ரூபவாஹினியின் டாரா சுற்றாடல் அறிக்கையிடல் நிகழ்ச்சியுடன் தொடர்புபட்டு விவரண நிகழ்ச்சித் தொடர் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டது. நுண் பிளாஸ்ரிக், சுற்றாடல் மாசாக்கி மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்குதல் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொடரின் ஒளிபரப்பு நோக்கமகக் காணப்பட்டது.




## பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடுதொடர்பாக செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- இலங்கையில் வெளிநாட்டு ஊடுறுவல் உயிரினங்களை அடையாளம் காணல், கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்தை அறிவூட்டும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் முறையே 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு மற்றும் பண்டாரகம பிரதேச செயலகங்களில் இடம்பெற்றன.



- வெளிநாட்டு ஊடுறுவல் உயிரினங்கள் சம்பந்தமாக மாகாண மட்டத்தில் காணப்படுகின்ற தற்போதைய நிலைமை தொடர்பாக உசாவிப்பார்த்து அது தொடர்பாக அனுபவத்தினை பரிமாற்றிக் கொள்வதற்காக வெளிநாட்டு ஊடுறுவல் உயிரினங்கள் பற்றியதாக பிரிவு முகாமையாளர் மற்றும் தேசிய ஊடுறுவல் உயிரினங்கள் தொடர்பான இரண்டு நிபுணர்கள் குழுக் கூட்டங்கள் முறையே 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி மற்றும் மார்ச் மாதம் 7 ஆம் திகதிகளில் சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்டிருந்தது.



- இலங்கையின் பல்வகைமைத்தன்மை சம்பந்தமான பல்வேறு பிரதான தலைப்பகைகள் தொடர்பாக புதிய அபிவிருத்தி அலுவலர்களை அறிவூட்டும் செயலமர்வொன்று 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.இந்த செயலமர்விற்கான சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து புதிய நியமனங்கள் கிடைக்கப்பெற்றது, ஏறத்தாழ 130 ஊழியர்கள் கலந்து கொண்டனர். இங்கு பேராசிரியர் ஆர். டபிள்யூ. கே. புஞ்சிஹேவா மகரந்தச் சேர்க்கைகளை/காவிகளை இனங்காணுதல், பாதுகாத்தல் மற்றும் அவற்றினால் சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள் தொடர்பாகவும், சுற்றாடல் வல்லுநர் திரு.



.அனுருத்த தென்னகோன் அவர்களால் ஈரநில சுற்றாடல் முறைமைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பாகவும், வெளிநாட்டு ஊடுறுவல் உயிரினங்கள் தொடர்பாக திரு. நலிந்த பீரிஸ் அவர்களினாலும் பயனுள்ள 3 விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

- யூன் மாதம் 5 ஆம் திகதி அன்று உலக சுற்றாடல் தினத்தை நினைவு கூறுவதற்காக தேசிய ரீதியில் வெளியிடப்பட்ட சுற்றாடல் வாரத்தினுள் உயிரியல் பல்வகைமைத் தினத்திற்காக சுற்றுலா வழிகாட்டுநர்கள் மற்றும் சுற்றுலா காவலர்கள் அனைவருக்கும் சுற்றாடல் சுற்றுலா கைத்தொழில் மேம்பாடு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதல்.

- சுற்றாடல் வாரத்தினுள் உயிரியல் பல்வகைமைத் தினத்திற்காக சுற்றுலா வழிகாட்டுநர்கள் மற்றும் சுற்றுலாக் காவலர்கள் அனைவருக்கும் சுற்றாடல் சுற்றுலா கைத்தொழில் மேம்பாடு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தம்புள்ளைபோபாம் பூங்காவில் நடைபெற்றதோடு அதற்காக தேசிய ஆரம்ப ஆய்வு நிறுவகம், மத்திய மாகாண சுற்றுலாத் திணைக்களம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கையின் ஐரோப்பிய அமைப்பின் நிதி பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.



**வளித் தர முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.**

நிலையான வாயு வெளியேற்றத் தரத்தன்மை அறிமுகம் செய்தல் தொடர்பாக்கைத் தொழிலாளர்களை அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கைத்தொழிலாளர்களை மையமாகக் கொண்டு 2022.03.02 ஆம் திகதி கடவத்தை இந்திரா ஹோட்டலிலும், காலி மாவட்டக் கைத்தொழிலாளர்களை மையமாகக் கொண்டு 2022.10.14 ஆம் திகதி காலி மாவட்டச் செயலகத்திலும் மற்றும் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள கைத்தொழிலாளர்களை மையமாகக் கொண்டு 2022.11.24 ஆம் திகதி மாத்தறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



வாயுவளங்கள் முகாமைத்துவ பிரிவு மூலம் Zoom தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பின்வரும் webinar நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

1. "வளி மாசடைதலும் மற்றும் சுகாதார தாக்கமும்: உங்களுக்குத்தெரியுமா? 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி சுகாதார அமைச்சின் சமூக மருத்துவ விசேட வைத்திய நிபுநர் இனோகா சுரவீர அவர்களால் நடாத்தப்பட்டது.
2. "சுவ திவியக் வெத்த பா பெதியக்" பற்றிய விரிவுரை சுவ திவியட பா பெதியக் அமைப்பின் தலைவர் திரு. அசோல அபேதீர அவர்களால் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி நடத்தப்பட்டது.
3. பேராசிரியர் அஜித் அல்விஸ் அவர்களால் நடாத்தப்பட்ட "சுழற்சி பொருளாதார அணுகுமுறையினூடாக சுத்தமான வளி" பற்றிய விரிவுரை 2022 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி நடாத்தப்பட்டது.




வளி மாசடைதல் தொடர்பான பாடசாலை பிள்ளைகளின் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக சித்திரப் போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன். 3 பிரிவுகளின் கீழ் வெற்றி பெற்ற மாணவர்கள் 18 பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.



## 2.1.9. சர்வதேச சுற்றாடல் உறவுகள்

### ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் (UNEP) ஐக்கிய நாடுகள் சுற்றாடல் சபையின் (UNEA) ஐந்தாம் அமர்வு

2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 16 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 04 ஆம் திகதி வரை கென்யா நைரோபியில்நடாத்தப்பட்டது. முன்னாள் சுற்றாடல் அமைச்சரான கௌரவ. மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் கௌரவ. அனில் ஜாசிங்க, இலங்கைத் தூதுவர் திரு. வேலுப்பிள்ளை கனநாதன் மற்றும் அமைச்சின், தொடர்புடைய அரச நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

### 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19, இலங்கையில் கொழும்பில் ஸ்டோக்ஹோம் +50 மாநாடுக்கான தேசிய ஆலோசனைத் தொடர்

இலங்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டில் Stockhom+50 மாநாட்டிற்கு முன்னர் தேசிய ஆலோசனைத் தொடரை நடத்துதல் மற்றும் Country Report அறிக்கை தயாரிக்கப்பட்டது.

**தலைப்புக்கள்/ கருப்பொருள்**

(i) The urgent need of Healthy Planet and prosperity for all;

(ii) sustainable and inclusive recovery from COVID-19; and

(iii) the implementation of the environmental dimension of the SDGs ஆகும்.



### சுவீடன் ஸ்ரோக்ஹாம் +50 ஆவது மாநாடு மற்றும் One Planet Network Forum.

பொஸோம் சம்மேளனத்தின் (BRS) மே மாதம் 31 ஆம் திகதி முதல் யூன் மாதம் 04 ஆம் திகதி வரை இடம்பெற்றது. உயர் மட்ட கலந்துரையாடலுக்கு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் திரு. அணில் ஜாசிங்க அவர்கள் கலந்துகொண்டார்.

### ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் (UNEP) நிரந்தர முகவர் குழுவின் (CPR) கூட்டம்

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 மற்றும் 26 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்ட CPR இன் 157 மற்றும் 158 ஆம் கூட்டங்களுக்கு சுற்றாடல் அமைச்சிலிருந்து UNEA இற்கு தொழில்நுட்ப முகவர்கள் கலந்து கொண்டனர்.

உலகளாவிய மாற்ற ஆராய்ச்சி யோசனை அபிவிருத்திப் பயிற்சிப்பட்டறை (PDTW) மற்றும் தென்னாசிய பிராந்தியக் குழுக்கூட்டத்திற்கு (SA-SRC) ஆசிய பசிபிக் வலையமைப்பு (APN) மற்றும் சுற்றாடல் அமைச்சின் அனுசரணையின் கீழ் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 முதல் திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெற்றது.

### Universal Periodic Review (UPR) 4 ஆவது சக்கரம் 2023 - ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கு இலங்கையின் தேசிய அறிக்கையைத் தயாரித்தல்

அனர்த்தங்களுக்கு பதில்குறி காட்டுவதற்காக தேசிய மனித உரிமைகள் அமுலாக்கல் திட்டத்தை மேற்கொள்வதற்காக காலநிலை மாற்றங்களை கருத்தில் கொள்வதனை உள்ளடக்குதல்.

### ஐக்கிய நாடுகள் பொது அமைப்பின் (UNGA) 77 ஆவது அமர்வு, நிவ்யோர்க், 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ச்சிநிரல் விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்

76 ஆவது UNGA 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நிலையான வளர்ச்சி மற்றும் முன்மொழிவுகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் விடயத்துடன் தொடர்புடையதாக அறிமுகப்படுத்தப்பட்ட பயன்பாடுகள், இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் கொள்கைகள் மற்றும் தேசிய சட்டங்கள் சுற்றாடல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டது

### வெளிநாட்டு பிரபுக்களுடன்/தலைவர்களுடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்

Global Green Growth Institute இன் பணிப்பாளர் நாயகம் டாக். பிரென்க ரிஜ்பர்மன் மற்றும் சுற்றாடல் அமைச்சின் உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு ஒன்று 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்றது

இலங்கைக்கான UNIDO பிரதிநிதி டாக். ரென் வென் பர்க்கல், CP Sri Lanka இற்கான 2 வது கூட்டு வழிநடாத்தல் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தனர் செப்டம்பர் 09 ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு நடைபெற்ற புதிய GEF 8 சுற்றின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் GCF ஏனைய சம்பந்தப்பட்ட GEF இற்கான செயற்பாட்டு மையத்தின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களை சந்திப்பதற்கான விஜயமொன்றை அவர் மேற்கொண்டார்

இலங்கையின் சுற்றாடல் மற்றும் சமூகச் சட்டகம் தொடர்பான பணிக்கூற்றின் (ESF) பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு மற்றும் சுற்றாடல் மற்றும் சமூகச்சட்டகம் (ESF) பாதுகாப்புக் கண்காணிப்பு,தென்னாசியப் பிராந்திய (SAR) வலயப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் பிரதம சுற்றாடல் நிபுணர் ஜோசெபோ ரியூயோர் அவர்கள் 2022 செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சின் அலுவலர்களுடன் ஒரு கூட்டத்தை நடாத்தனார்

## இருதரப்பு சுற்றாடல் உடன்படிக்கைகள்

**இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாய விஞ்ஞானம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச நிலையங்களுக்கு இடையில் அனுசரணை வழங்கும் நாட்டுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தல்.**

காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளின் மத்தியில் இலங்கையைப் பலப்படுத்துவதற்காக சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்குவதற்காக விவசாய விஞ்ஞானம்தொடர்பான ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச நிலையத்துடன் உடன்படிக்கையொன்றுக்காக அமைச்சரவையின் அனுமதிக்காகக் கிடைத்தது.

## உலகளாவிய சுற்றாடல் வசதிகளின் கீழ் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களை செயற்படுத்துதல் GEF.

- **2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி GEF OP 8 தேசிய கலந்துரையாடலின் பங்குதாரர்கள் கூட்டம்**

2022 யூலை 1 ஆம் திகதி முதல் 2026 யூன் வரை ஆரம்பிக்கப்பட்ட GEF 8, COVID 19 தொற்று நோயிலிருந்து நிலையாக பழைய நிலைமைக்கு வருவதற்கு, இயற்கை மற்றும் மனித சுகாதாரத்திற்கு உள்ள சவால்களிற்கு அடிப்படை காரணங்களுடன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் பாரிய முன்னேற்றத்தை அடைவதற்குத் தீர்மானமான காலப்பகுதியுடன் சுற்றாடல்இலக்குகளுடன் செயலாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.



## உலகளாவிய மாற்றங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கான ஆசிய - பசிபிக் வலையமைப்பு (APN)

நவம்பர் 29 ஆம் திகதியிலிருந்து Galle Face Hotel இல் நடாத்தப்பட்ட உலகளாவிய மாற்றங்கள் ஆராய்ச்சிக்கான ஆசிய பசிபிக் வலையமைப்பின் (APN) உப பிராந்திய குழு மற்றும் தென்னாசிய செயற்றிட்ட முன்மொழிவுகள் அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வுக்காக இலங்கை அரசாங்கம் 2022 ஆம் ஆண்டுக்காக அனுசரணை வழங்கப்பட்டது.






## சர்வதேச முகவர் நிறுவனங்களுடன் நிதிப் பொறுப்புக்கள்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கூட்டிணைவுடன் தொடர்புடைய நிரல் அமைச்சினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய சர்வதேச முகவர் நிறுவனங்களுக்கான பங்களிப்பு/ அங்கத்துவக் கட்டணங்கள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள் தொடர்பில் அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம், சர்வதேச நிறுவனங்களுடன் நிதிப் பொறுப்புக்கள் பேணப்பட்டன.

## 2.1.10. சுற்றாடல் தினக் கொண்டாட்டம்;

**சர்வதேச புவி தினம்**

(2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி)

இவ்வருட உலக புவி தினத்தின் தொனிப் பொருள் " Invest in Our Planet" (புவியில் முதலீடு செய்யுங்கள்) எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. புவியைப் பாதுகாப்பதற்காக இலத்திரனியல் கழிவுகளை சரியான முறையில் முகாமைத்துவத்திற்காக முதலீடு செய்தல், உயிரியல் பல்வகைத் தன்மை, அழிவடைதல் மற்றும் கடல்சார் வளங்கள் பாதுகாப்பு தொடர்பில் தாக்கம் செலுத்தும் விதம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் போது காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நிதி வாய்ப்புகள் என்ற தலைப்புகளில் விரிவான விரிவுரைகளை மூலம் அமைச்சின் அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**சர்வதேச உயிரியல் பல்வகைமைத் தன்மை தினம்**

(2022 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி)

சர்வதேச உயிரியல் பல்வகைமை தின ஞாபாகார்த்த நிகழ்ச்சித் திட்டத்தின் மகுட வாசகம் "அனைத்து உயிரினங்களும் ஒன்றிணைந்து வாழுவதற்குரிய ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்" என்பதாகும். மேற்கூறிய தொனிப்பொருளின் கீழ் விதுசர மற்றும் அத ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள்/ கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டதோடு இணைய வழி முறையின் ஊடாக பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சர்வதேச சுற்றாடல் தினம்**

(2022 ஜூன் மாதம் 05 ஆம் திகதி)

இம்முறை சர்வதேச சுற்றாடல் தினம் "ஒரே வீடு புவியே" எனும் தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக "மொக்ரோபிளாஸ்டிக் மற்றும் நீங்கள்" புத்தகமும் வெளியிடப்பட்டது. தேசிய ரீதியில் சுற்றாடல் வாரமொன்று பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அந் வாரத்தினுள் சுற்றுலாத்துறை வழிகாட்டுநர்கள் மற்றும் சுற்றுலாப் பாதுகாவலர்கள் ஆகியவர்களுக்கு சுற்றாடல் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவது தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

**சர்வதேச கண்டல் நில/ சதுப்புநில சுற்றாடல் முறைமை பாதுகாப்புத் தினம்**

(2022 ஜூலை 26)

இலங்கையில் கண்டல்/ சதுப்பு நிலச் சுற்றாடல் முறைமையின் மீள் கட்டமைப்பு தொடர்பில் தயாரிக்கப்பட்ட தேசிய வழிகாட்டல் உரிய அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்யும் செயலமர்வு ஒன்று "இணைய வழி முறைமை" மூலம் நடாத்தப்பட்டது.

**நீல வானத்துக்கான சுத்தமான வாயு குறித்த மூன்றாவது சர்வதேச தினம்.**

(2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் திகதி)

நீல வானத்திற்கான தூய காற்றுக்கான சர்வதேச தினத்தைக் கொண்டாடுவதற்காக தொடர்புடைய பங்குதாரர் நிறுவனங்களுடன் இணைந்து அறிஞர்கள் மாநாடு ஒன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. மேலும் Daily Mirror செய்திப் பத்திரிகையில் வளி தரத்தன்மை முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பான பத்திரிகை மேலதிக அனுபந்தம் ஒன்றை வெளியிடுவதனூடாக மூலம் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**தேசிய ஓசோன் தினம்**

(2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி)

"வாழ்வின் நிலையைப் பாதுகாப்பதற்காக உலகளாவிய ஒத்துழைப்பு" என்ற தலைப்பில் இம்முறை ஓசோன் தினக் கொண்டாட்டம் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டாக்டர். அணில் ஜாசிங்ஹ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**உணவு வீண் விரையமாதல்/ உணவுக் கழிவுகள் மற்றும் உணவுக் கழிவுகளைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு சர்வதேச தினம்.**

(2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி)

உணவு வீண் விரையமடைதல் மற்றும் உணவுக் கழிவுகளைக் குறைத்தல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதற்கு இணையாக உணவு வங்கியொன்றும் சுற்றாடல் அமைச்சில் புதிதாகத் தாபிக்கப்பட்டது.

**உலக மண் தினம்**

(2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆம் திகதி)

இலங்கை மண் அறிவியல் சங்கத்தினால் மத்திய மாகாணத்தின் பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற வினா விடை அறிவுப்போட்டி மற்றும் அனுராதபுரம் திறப்பனை பிரதேச செயலகப் பிரிவில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான ஆரோக்கியமான நிலத்தோற்ற/தளக்கோலக் கருத்திட்டம் (Healthy Landscape Project) தொடர்பாக நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்.

**சர்வதேச மலைகள் தினம்**

(2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி)

சர்வதேச மலைகன் தினத்திற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் "மலைப் பிரதேசங்களின் இருப்புக்காக பெண்களின் பங்களிப்பு" என்ற தலைப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் அநுராதபுரம் மாவட்டத்தின் ரிட்டிகல குன்றை அண்மித்த மலைப் பாங்கான பிரதேசத்தில் மலையக பல்லுயிர்த்தன்மை மற்றும் நிலைபேறான சுற்றுலாக் கைத்தொழில் பற்றிய விழிப்புணர்வூட்டல் மற்றும் செயன்முறைப் பயிற்சிப் பட்டறை என்பன நடாத்தப்பட்டது.

## 2.1.11. ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை ஆறுகள் மற்றும் ஆறுகள் சார்ந்த சுற்றாடல் முறைமைகள் மற்றும் நீர்ப் போசாக்குப் பிரதேசங்களின் பாதுகாப்புக்காக செயற்படுத்தப்படுகின்ற பிரதான சுற்றாடல் முறைமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும்.

2022 ஆம் ஆண்டிற்கான ஆறுகளைப் பாதுகாப்போம் செயலகத்தின் மதிப்பீட்டுக் குழுவினால் 14 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 31 செயற்றிட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டது. அதில் 4 செயற்றிட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

## 2.1.12 சுவாசம் தரும் மரங்கள் தேசிய மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டம்.

உள்நாட்டு வன வளங்களை 30% வரை அதிகரிக்கும் தேசிய மர நடுகைச் செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கான " சுவாசம் தரும் மரங்கள்" மர நடுகைத் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

"சுவாசம் தரும் மரங்கள்" தேசிய மர நடுகைத் திட்டத்திற்கு ஒரு வருடம் நிறைவுபெறுவதை முன்னிட்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அக்குரேகொடை இராணுவ படை தலைமையகத்தில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.



இலுப்பை மரக் கன்றுகள் நடுகை நிகழ்ச்சித் திட்டம்

கௌரவ சுற்றாடல் அமைச்சரின் தலைமையின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் சங்கம் மற்றும் சுவர்ணவாஹினி ஊடக நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் 2022.03.11 ஆம் திகதி அம்பாறை கொண்டுவட்டுவான் குளக் கரையில்/படுக்கையில் இந்த மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது. இதன்போது 2000 இலுப்பை மரக் கன்றுகள் நடுகைக்காக விநியோகிக்கப்பட்டது.

**பசுமைத் தொழில் முயற்சியாண்மை ஊக்குவிப்பு மூலம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தீவு முழுவதிலும் 650 நாற்று மேடைகளை உருவாக்குதல்நிகழ்ச்சித் திட்டம்.**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளிகள் மாவட்டச் செயலாளர்களினால் மாவட்டத்தின் தேவைக்கேற்ப நாற்றுமேடைகளை உருவாக்குவதற்காக, பிரதேச செயலாளர்கள் ஊடாக குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு ஆற்றுப்படுத்தப்பட்டதோடு ஒரு நாற்று மேடைக்காக மூன்று இலட்சம் (300,000.00) உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்றுமேடையாளர்களுக்குத் தேவையான பயிற்சி சுற்றாடல் அமைச்சு மூலம் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.





**"சுப நேரத்தில் ஒரு மரக்கன்று "(நெக்கத்தட்ட பெலயக்) நிகழ்ச்சித் திட்டம்**

கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் கொண்ட பண்டிகைகளுடன் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் நிலைபேறான தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு பிரதானமான கருவியாகும். ஆதலால், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விழாவோடு இணைந்ததாக மர நடுகை சுப நேரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த "சுப நேரத்தில் ஒரு மரக்கன்று" (நெக்கத்தட்ட பெலயக்) தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 11.16 க்கு நடாத்தப்பட்டது. "சுப நேரத்தில் ஒரு மரக்கன்று" தொடர்பில் நாடளாவிய ரீதியான ஒரு நிகழ்ச்சித் திட்டமாக அனைத்து அரச நிறுவனங்களிலும் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்குரிய சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

சுதந்திர தின நிகழ்வு

74 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு 2022.02.04 ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

## 2.1.13. நிறுவன அலுவல்கள்

| | |
|---|---|
| ஆட் சேர்ப்புச் செய்தல் | |
| அபிவிருத்தி அலுவலர்கள் | 358 |
| சேவை நிரந்தரம் செய்தல் | |
| நாடளாவிய சேவை | 02 |
| முகாமைத்துவ சேவை அலுவலர்கள் | 04 |
| இணைந்த சாரதி சேவை | 03 |
| அலுவலக உதவியாளர் சேவை | 10 |
| பதவி உயர்வு | |
| நாடளாவிய சேவை | 06 |
| அரச முகாமைத்துவ சேவை | 05 |
| இணைந்த சாரதி சேவை | 05 |
| அலுவலக பணியாளர் சேவை | 03 |
| இளைப்பாறுதல் | |
| நாடளாவிய சேவை | 02 |
| அரச முகாமைத்துவ சேவை | 01 |
| இணைந்த சாரதி சேவை | 01 |
| கேட்டு விலகல் | |
| அபிவிருத்தி அலுவலர் | 11 |
| பதவி விட்டுச் செல்லல் அபிவிருத்தி அலுவலர் | 05 |
| கடன் வழங்கல் | |
| இடர் கடன் | 104 |
| உள்நாட்டு லீவு பொ.நி.சு.அ 14/2022 | 08 |
| வெளிநாட்டு லீவு பொ.நி.சு.அ 14/2022 | 07 |
| அடையாள அட்டை தயாரித்தல | 233 |
| பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அனுப்புதல | 10 |
| வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் | 09 |
| சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கல் | 11 |
| அமைச்சரவைப் பத்திரம் | 20 |

## 2.1.14 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

**அமைச்சினதும் மற்றும் அதன் நிறுவனங்களினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளை முறையாக பலப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.**

**அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால்,** 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது, மேலும் அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 2.1.15 சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடு, மேன்முறையீடுகள் மற்றும் ஊடக

அறிக்கையிடல் காலப்பகுதிக்கு ஏற்புடையதாக நிறுவனங்களுக்கு ஏற்ப விசாரணை நடவடிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 585 ஆகும் அறிக்கை கோரி அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை 449 ஆகவும் பதில் கிடைக்கப்பெற்றுள்ள எண்ணிக்கை 196 ஆகவும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் எண்ணிக்கை 11 ஆகவும் காணப்பட்டது.

## 2.1.16. சட்ட அலுவல்கள்/நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| அமைச்சுக்குரிய வழக்குகள்/ மனித உரிமை மனுக்களுக்குரிய நடவடிக்கைகளுக்கு உதவிபுரிதல் | 38 |
| சட்ட வரைஞர் மற்றும் சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்கு உதவுதல் (வர்த்தமானி, சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்) | 02 |
| ஒப்பந்தங்களைத் தயாரித்தல்/ பரீட்சித்தல் | 51 |
| பொதுமக்களின் முறைப்பாடுகள் சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளல் | 01 |

## 2.2 சுற்றாடல் அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

### 2.2.1 சமூக அடிப்படைச் சுற்றாடல் முறைமை அணுகுமுறையின் மூலம் வனங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைகள் ஒன்றிணைந்த முகாமைத்துவச் செயற்றிட்டம்.

இந்த கருத்திட்டத்தின் நோக்கம், இலங்கையின் அனுராதபுரம், மன்னார், வவுனியா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மல்வத்து ஓயா படுகையை அண்டியுள்ள வனங்கள், விவசாய மற்றும் சுற்றுலாத் துறைகளின் நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் துறை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் போது பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான மூலோபாயங்களை அணுகுவதன் ஊடாக உயிரியல் பல்வகைமையினைப் பாதுகாத்து அதன் உறுதிப்பாட்டைப் பலப்படுத்துவதாகும்.

**4 பிரதான ஆக்கக் கூறுகளை உள்ளடக்கியுள்ளன.**

**முதலாவது ஆக்கக் கூறு: தீர்மானங்கள் எடுத்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக நிறுவனத்தின் ஆற்றல்கள் திறன்களை விருத்தி செய்தல்.**

இரண்டாவது செயற்றிட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டம் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதியில் இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டிற்கான அமுலாக்கல் திட்டம் செயற்றிட்டத் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு கருத்திட்டத்தின் இணையத்தளம் மற்றும் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணம் வெளியிடப்பட்டது.

**பசுமை சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை தாபித்தல்.**

புத்தளம் மாவட்ட வன அலுவலக வளாகத்தில் உத்தியோகபூர்வ பசுமை சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இயலளவை அதிகரிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகின்றது. சதுப்புநில/கண்டல் தொடர்பாக அறிவுறுத்தும் மத்திய நிலையமொன்றாகவும் மற்றும் கண்டல் சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாட்டுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் அதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

சமுதாய அடிப்படையிலான சுற்றாடல் முறைமைக்கான அணுகுமுறை என்பது பொதுமக்களிடையே அதிக விழிப்புணர்வு மற்றும் அவர்களின் செயற்பாட்டு உதவியுடன் மற்றும் கருத்திட்ட செயற்பாடுகளுக்கான ஒத்தழைப்பு தேவையான புதிய எண்ணக்கருவாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள சேவையின் "மிஹிதலய" வானொலி நிகழ்ச்சியின் மூலம் 8 சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

உயிரியல் பல்வகமைத் தன்மை மற்றும் நிலைபேறான சுற்றுலாக் கைத்தொழிலை என்ற கருப்பொருளில் சுற்றாடல் அமைச்சினால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவியுடன் சர்வதேச மாநாடொன்று 2022 திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திர ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

**இரண்டாம் ஆக்கக் கூறு: உயிரியல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான வாழ்வாதாரங்களுக்காக புவியியல் குறிக்காட்டிகளை அடிப்படையாகக் கொண்ட மூலோபாயங்களைத் தயாரித்தல் மற்றும் தற்போதுள்ள கொள்கைச் சட்டகத்திற்கு ஒன்றிணைப்புச் செய்தல்.**

**மூன்றாம் ஆக்கக் கூறு: உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பின் மூலம் சமூக, பொருளாதார**



**நன்மைகளைப் பெறுவதற்கான பங்களிப்பு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் வாழ்வாதாரங்களை/ ஜீவனோபாய முறைகளைத் தாபித்தல்**

ஆறு கொத்தனிக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல் முடிவுறுத்தப்பட்டுள்ளது. உத்தேச கண்டுபிடிப்புக்களில் யானைகள் பாதையைக் கடக்குமிடங்கள் மற்றும் புதிய பாதுகாப்பு பிரதேசங்களை அமைத்தல் மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல் போன்ற திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

ஒன்றிணைந்த காணி பயன்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக காணி பயன்பாட்டு திட்டமிடல் தொடர்பான செயலமர்வொன்று யூன் மாதம் 28 ஆம் திகதி அனுராதபுர பிந்திய அறுவடைத் தொழில்நுட்ப நிறுவகத்தில் நடாத்தப்பட்டதோடு யூன் மாதம் 29 ஆம் திகதி திரப்பனையிலுள்ள மஹகணுமுல்ல மலையருவித் தொகுதியில் வெளிக்கள விஜயம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. இதில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து ஏற்றுமதி விவசாயம், கமத்தொழில் நிலையங்கள், மாகாண விவசாயம், இடைநிலை மாகாண விவசாய மற்றும் அனுராதபுர மாவட்ட செயலகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செயற்றிட்டத்தின் பணிக்குழுவினரை ஒரு முகப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு பயிற்சிப்பட்டறையொன்று 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நீர்கொழும்பில் இடம்பெற்றது. இந்த செயலமர்வின் நோக்கம் செயற்றிட்டக் குழுவிற்கு எண்ணக்கருக்கள், அணுகுமுறைகள், தலையீடுகள் மற்றும் ஒருங்கிணைந்த முகாமைத்துவச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டுப் பிரிவுகள் எண்ணக்கரு மயப்படுத்தப்பட்டுகின்றன.

விவசாய நிலங்களில் மண் பரிசோதித்தல் மற்றும் நீர் தரத்தை பரிசோதித்தல் தெரிவு செய்யப்பட்ட விவசாய அலுவலர்கள் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுக் குழுக்களின் இயலளவை விருத்திசெய்தல். 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கஹடகஸ்திகிலிய விவசாய சேவைகள் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

வடமேல் மாகாண சபையின் கீழ் செயற்படுகின்ற கைத்தொழில் சேவைகள் பணியகத்தின் (ISB) செயற்றிட்டப் பிரதேசத்தின் பயனாளிகள் (பங்குதார்கள் மற்றும் சமூகம்) இனங்காணப்பட்டு தகவல் சேகரிப்பதற்காக சமூக - பொருளாதார அடிப்படை ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயிரியல் ரீதியான பாதுகாப்பின் அடிப்படையில், ஒன்றிணைந்த சந்தை மாதிரி, சோளம் பயிர்ச் செய்கைக்கான விஞ்ஞான அடிப்படை பிரவேசம் மற்றும் நீண்டகால பழப்பயிர்ப் பூங்காக்கள் ஊடாக களக்கற்றல் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மெகிச்சாவையில் ஏற்பாடு செய்யப்பட்டது.
பரீட்சார்த்த நிலத் தோற்றம் 1 மஹகனந்தராவ மற்றும் பரீட்சார்த்த நிலத் தோற்றம் 2 தந்திரிமலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமைப் பகுப்பாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மஹகனந்தராவ உயிரியல் பல்வகைமைப் பகுப்பாய்வு அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு ஏனைய 5 பல்வகைமை மதிப்பீட்டு அறிக்கை வரைவு செய்யப்பட்டுள்ளது.
கிராம அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட ஏறத்தாழ 120 அரச அலுவலர்களின் பங்குபற்றலுடன் மஹகனந்தர மற்றும் நன்னதான் நிலத் தோற்றங்களின் நிலப் பயன்பாடு திட்டமிடல் தொடர்பான 2 இரண்டு நாள் பயிற்சிப் பட்டறைகள் முறையே திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி மற்றும் 13 ஆம் திகதிகளிலும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளிலும் நடாத்தப்பட்டது.

காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் கொண்ட விதைகள் மற்றும் தாவரக் கன்றுகள் இச்செயற்றிட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அனுராதபுர மாவட்டத்தில் மஹவிலாச்சிய பிரதேச செயலகப் பிரிவில் தந்திரிமலை



கிராம சேவகர் பிரிவில் 12 விவசாயிகள், நெலும்வில கிராம அலுவலர் பிரிவில் 30 விவசாயிகள் மற்றும் துப்பிட்டியவ கிராம அலுவலர் பிரிவில் 8 விவசாயிகளுக்காக பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான நீர் வழங்கலுக்காக ரூபா 77.2 மில்லியன் பெறுமதி கொண்ட நுண் நீர்ப்பாசன முறைமையொன்றினை தாபிக்கும் பணிகள் மற்றும் கரபேவ பிரதேசத்தில் கூட்டுப்பசளை உற்பத்தி ஆலையொன்றை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பரீட்சார்த்த நிலத் தோற்றம் 1 மற்றும் 2 இல் சமூக பொருளாதார ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டிருப்பதோடு தற்போது 876 பயனாளிகள் செயற்றிட்டப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விவசாய ஆலோசனைக் குழுவினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப வெளியீடுகள் மற்றும் தயாரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத் திட்டங்களைக் கருத்திற்கொண்டு மதவாச்சியா, மஹவிலாச்சியா, மானுப மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேசங்களில் விவசாய அமைப்புகளை நிறுவுவதன் மூலம் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

தேன் பூச்சி கைத்தொழிற்துறைக்கு விவசாயிகள் மற்றும் கிராமிய மக்களை இணைத்துக்கொள்வதற்கான ஆரம்ப பயிற்சிப்பட்டறையும் கூட்டமும் அனுராதபுர மாவட்டத்தில் பலுகஸ்வெவ பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதற்காக 50 பாடசாலை மாணவர்கள். பலுகஸ்வெவ பிரதேச செயலாளர் அலுவலக ஊழியர்கள் மற்றும் கிராமவாசிகள் சுமார் 30 கலந்து கொண்டனர்.

பரீட்சார்த்த நிலத் தோற்றம் 3 சுட்டிகள் மற்றும் மடுப் பிரதேசத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான திட்டம் மற்றும் அமுலாக்க மூலோபாத் திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய பிரதான சுற்றுலா வலயங்கள் மற்றும் பண்புகள்/ அம்சங்கள். கீழே காட்டப்பட்டுள்ளவாறு இனங்காணப்பட்டுள்ளது.

- மடு பிரதேசத்திலுள்ள மாவில் பாதுகாப்பு சுற்றுலா வலயத்தில் சமூக அடிப்படை சுற்றுலாக் கைத்தொழில் ஊடாக கிராமியம் பொருளாதார அபிவிருத்தி.
- அரிப்புப் பிரதேசத்தில் சமூக அடிப்படை சுற்றுலா கைத்தொழில் ஊடாக கிராமியப் பொருளாதார அபிவிருத்தி
- சிலாவத்துறை கயாங்குலி சுற்றுலா வலயத்தில் சமூக அடிப்படை சுற்றாடல் நுகர்வோர் அச்சமிக்க சுற்றுலாக் கைத்தொழில் ஊடாக கிராமிய பொருளாதார அபிவிருத்தி
- வங்காலை சமூக அடிப்படைச் சுற்றாடல் சுற்றுலாத்துறை கைத்தொழில் ஊடாக கிராமியப் பொருளாதார அபிவிருத்தி

**பொதுமக்கள் தகவல் மற்றும் ஒருங்கிணைப்பு**

1. ஹபரணையில் நினைவு கூரப்பட்ட உலக சுற்றுலாத் தினத்தை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தும் காணொளி/வீடியோ
2. 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி ரிட்டிகல உலக மலைத் தின கொண்டாட்டம் தொடர்பான தொடர்பாடல் சாதனங்கள் உற்பத்தி.
3. செயற்றிட்ட முகநூல் பக்கம் மற்றும் யூ டியுப் அலைவரிசை ஆரம்பித்தல்
4. பிரிவின் இலக்கு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், பாடசாலைகள் சார்ந்த நிகழ்ச்சிகள் என்பன திட்டமிடப்பட்டுள்ளன.

## 2.2.2 பொலிக்லோரினேட் பயிபினைல் (PCB) கழிவு பொருட்கள் மற்றும் பொலிக்லோரினெட் அடங்கிய உபகரணங்களைச் சூழலுக்குச் சாதகமான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அகற்றுதல் செயற்றிட்டம்

இந்த கருத்திட்டத்தின் நோக்கம் மின்சார ரான்ஸ்போமர் மற்றும் வேல்டிங் (ஒட்டு) ரான்ஸ்போமர்களின் PCB அடங்கிய எண்ணை கொண்ட ரான்ஸ்போமர்களை இனங்கண்டு அதில் உள்ள ரான்ஸ்போமர் எண்ணை மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரான்ஸ்போமர்களை சுற்றாடல் பாதுகாப்பானவாறு வெளியேற்றுதல் ஆகும்.

வேல்டிங் பிரிவின் இன்வென்றி (பொருட் பதிவேடு) தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு ரான்ஸ்போமர் எணணை மாதிரிகள், பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. PCB கொண்ட எண்ணைக்குப் பதிலாக சுத்தமான எண்ணையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மின்சக்திப் பிரிவின் PCB ரான்ஸ்போமர் இன்வென்றி (பொருட் பதிவோடு) தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2021/09/15 ஆம் திகதிய 21/1573/321/018 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அகற்றுதல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தின் பங்களிப்பான 68 மில் ரூபா இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மின் சக்தி மற்றும் ஒட்டுப் பிரிவுக்காக PCB பயிற்சி மற்றும் இன்வென்றி (பொருட் பதிவோடு) கைநூல் தயாரிக்கப்பட்டது.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக நீண்டகாலம்

நிலைத்திருக்க கூடிய உயிரியல் திரண்ட மற்றும் இரசாயனப் பொருட்கள் (PBT) பற்றிய கைநூல் தயாரிக்கப்பட்டது.

தாய்ப்பாலில் டயோக்ஸின் உள்ளதா என்பதை ஆராய்வதற்காக பேராதனை பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு மாதிரிகளைச் சேகரித்தல் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு அவற்றில் உள்ள நீண்டகாலம் நிலைத்திருக்க கூடிய மாசாக்கி இரசாயனப் பொருட்கள் பரிசோதனைக்காக சீனாவிற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவக் கொள்கையைத் தயாரித்தல்.

இந்த செயற்றிட்டத்தின் கீழ் தேசிய இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவக் கொள்கையின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கொள்கைக்காக பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அவை அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கொள்கை வகுத்தமைத்தல்

வேலைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.2.3 மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் " இரசம் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை" தொடர்பான கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் மூலம் சுகாதார, தொழிநுட்ப மற்றும் கல்வித் துறைகளில் பாதரசம் உபயேகித்தல் தொடர்பாக நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றின் மூலம் ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

மினமாட்டா ஆரம்ப மதிப்பீட்டுக் கருத்திட்டம்.

( இரண்டாம் கட்டம் )

தங்க ஆபரணப் பொருட்கள் தயாரிக்கின்ற சிறிய அளவிலான வியாபாரிகள் பற்றிய ஆய்வொன்றை செய்வதற்காக மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடப்பட்டு தற்போது கொழும்பு, கம்பஹா, கண்டி, பதுளை, காலி, மாத்தறை, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆய்வுப் பணிகளை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சிறியளவு தங்க உற்பத்திப் பிரிவில் பாதரசம் பாவனை தொடர்பான ஆய்வின் இறுதி அறிக்கை ஐக்கிய நாடுகளின் தொழிநுட்ப அபிவிருத்தி நிறுவனம் (UNIDO) மற்றும் கருத்திட்ட செயற்பாட்டுக் குழுவுக்கு சமர்ப்பித்து அவர்களின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டது.

சிறிய அளவிலான ஆபரணங்கள் உற்பத்தியில் ஈடுபடுவோரின் இரசம் தாக்க மட்டத்தின் உண்மை அளவை மதிப்பீடு செய்தல் மற்றும் விரிவான உயிரியல் பல்வகைமை ஆய்வின் சாத்தியக்கூறுகளை இனங்காண்பதற்கான முன்னோடி ஆய்வொன்றை (Bio Monitoring) நடத்துவதற்கு அமைச்சு மாணிக்க கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் உடன்படிக்கைசெய்துள்ளது

சிறிய அளவிலான ஆபரணத் தயாரிப்புத் துறைக்கு இரசம் அல்லாத சுற்றாடல் நேயமுள்ள மாற்று வழிகளை அறிமுகம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட மாற்றீடுகள் ஆய்வுகூட மட்டத்தில் பரிசோதிக்கப்பட்டன. இதற்காக Aqua regia, hypochlorite மற்றும் நவசாரம் ஆகிய மூன்று மாற்று வழிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றுள் hypochlorite பயன்படுத்தி தங்கம் வேறுபிரித்தல் மிகவும் பொருத்தமான மாற்று வழி என அடையாளம் காணப்பட்டது.

## 2.2.4 கல்லீரல் பாதுகாப்பான சிகிச்சை முறையொன்றாக இரசம் அடங்கிய " லோகநாத ரச " மருந்துப் பயன்பாடு ஆய்வு.

இரசம் உள்ளடங்கிய பல் வகையான கன உலோகங்கள் சில நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தல் ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் பாரம்பரிய மருந்துவ முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பாரம்பரிய முறைகளில் சமூக முக்கியத்துவத்தை உணர்ந்தமையால் இரசத்திற்கான மினமாட்டா உடன்பாட்டின் ஊடாகவும் பாரம்பரிய பிரயோகங்களுக்காக இரசப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கான மாற்றீடாக காட்டப்பட்டுள்ளது இருப்பினும், இலங்கை உட்பட ஏனைய ஆசிய நாடுகள் பாரம்பரிய சிகிச்சை முறைக்காக இரசம் பாவனை தொடர்பில் தற்பொழுது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்டதாகும். அதன் பிரகாரம் " ரச வெதகம " கீழ் தயாரிக்கப்பட்ட " லோகநாத ரச " மருந்து மூலம் கல்லீரல் சார்ந்த புற்றுநோய்க்கு இரசம் பயன்படுத்தல் தொடர்பில் விஞ்ஞானப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதன்படி ஆராய்ச்சிக்காக பயன்படுத்திய எலிகளுக்கு மருந்துகள் மூலம் பக்கவிளைவு நோய்கள் ஏற்படாதென உறுதிப்படுத்தப்பட்டதுடன் லோகநாத ரச மருந்துகள் மூலம் கல்லீரல் புற்றுநோயை அழிக்கும் ஆற்றல் பற்றி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டது.

கல்வித் துறைகளின் கொள்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் உள்ளடங்கலாக இரசம் அடங்கிய கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் சம்பந்தமான அந்தப்பிரிவுகள் மற்றும் இச்செயற்றிட்டத்திற்காக சுவிஸ்சர்லாந்து அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவனத்துடன் (United Nations Industrial Development Organization) இணைந்து ரூபா. 3.35 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன் 2021 – 2022 வரை காலப்பகுதி செயற்றிட்ட காலப்பகுதியாகும்.மேலும் இச் செயற்றிட்டமானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்நாட்டு மருத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதன்படி, சுற்றாடல் அமைச்சு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியன உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதோடு ஏற்கனவே கருத்திட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.



## 2.2.5 மினமாட்ட உடன்படிக்கைக்குரிய விசேட சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற இரசம் அடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுகளைக் குறைப்பதற்கான தேசிய கொள்திறன் விருத்திச் செயற்றிட்டம்.

மினமாட்டா உடன்படிக்கைக்குரிய விசேட நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச திட்டங்கள் (Specific International Programme) மற்றும் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (United Nations Environmental Programme) நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து ரூபா. 32.15 மில்லியன் நிதி வசதிகளை வழங்கும் இச் செயற்றிட்டத்தின் ஆரம்பப் பணிகளின் நோக்கம் யாதெனில் இரசம் அடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுகளைக் சுற்றாடல் நட்புறவாக/ சுற்றாடலுக்குச் சாதகமான முறையில் வெளியேற்றுதல் மற்றும் மு காமைத்துவம் செய்வதற்குத் தேவையான தேசிய திறன் விருத்தி மூலம் இலங்கையினுள் மீனமாட்டா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியளிப்பதாகும்.

இச்செயற்றிட்டத்தின் முக்கிய ஆக்கக் கூறினாலான கைத்தொழில், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் பயன்படுத்தப்படும் இரசம் உள்ளடக்கிய உற்பத்திகளுக்குப் பதிலாக பயன்படுத்த முடியுமான இரசம் உள்ளடக்கப்படாத சுற்றாடலுக்குச் சாதகமான மாற்றுப் பொருட்களை அறிமுகப்படுத்தல், இரசம் உள்ளடக்கப்படாத கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்திற்கான தேசிய வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல் மற்றும் கைத்தொழில், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் உட்பட இரசம் சேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக அந்தப் பிரிவுகள் மற்றும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

ஏற்கனவே தொழில்நுட்ப வழிகாட்டல்களுக்கான முதலாவது வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதோடு இரசம் உள்ளடங்கும் உற்பத்திகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய சாத்தியமான மாற்றீடுகள் தொடர்பான ஆய்வு நிறைவடையும் கட்டத்தில் உள்ளது. இரசம் மற்றும் இரசம் அடங்கிய கழிவுப் பொருட்களை சூழலுக்கு இசைவானதாக முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக கைத்தொழில், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் உரிய தரப்பினர்களை பயிற்சியளிப்பதற்கான உபகரணம் மற்றும்மொடியுள் மற்றும் இரசம் தொடர்பாக அறிவுறுத்தும் கருவிகள்/உபகரணங்கள் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இரசம் காணப்படுகின்ற உற்பத்திகளுக்கான மாற்றுவழிகளுக்கான "செலவு நன்மைப் பகுப்பாய்வு" மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 2.2.6 கடல்சார் கழிவுகள் மற்றும் நுண் பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்கள் சுற்றாடல் நட்புறவானவாறு சூழலுக்கு இசைவாக முகாமைத்துவம் செய்வதனை மேம்படுத்துதல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாக்கத்தை தவிர்த்தல் மற்றும் குறைத்தல்.

சுற்றாடல் அமைச்சினால் UNEP/BRS செயலக அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தக் கருத்திட்டத்திற்காக நிதி அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நேர்வே முகவர் நிறுவனத்தினால் (NORAD) ஆகும். ஜப்பானின் சர்வதேச சுற்றாடல் மூலோபாய நிறுவனத்தினால் (IGES) செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

செயற்றிட்டத்தின் நோக்கம் நாட்டினுள் நிலம் சார்ந்த செயற்பாடுகளில் இருந்து கடல்சார் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண் பளாஸ்ரிக் உருவாக்கத்தை தவிர்த்தல் மற்றும்கணிசமானளவு குறைத்தல் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) இலக்கு 14.1 இற்கு பங்களிப்பு வழங்குவதாகும்.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடு பிளாஸ்ரிக் கழிவுப்பொருளுக்கான தேசிய இன்வென்றி ஒன்றைத் தயாரித்தல், பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய சட்டம் மற்றும் நிறுவன சட்டகத்தைத் தயாரித்தல். பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம்தேசிய மூலோபாய திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அறிவுறுத்தல் மீனவப் பொதிகள் மற்றும் கழிவு நீர் (நுண் பிளாஸ்ரிக்) ஆகிய துறைகளின் கழிவபொருட்கள் முகாமைத்துவத்திற்கான முன்னோடிப் பரிசோதனைகளை நடாத்துதல் இந்தச் செயற்றிட்டத்தின் ஆலோசனை, பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10/11 ஆம் திகதியில் ஆரம்ப மற்றும் இன்வென்றி பற்றிய செயலமர்வுகள் இலங்கை மன்றக் கல்லூரியில் தொடர்புடைய பங்குதாரர்களுடன் நடாத்தப்பட்டது.

BRS/UNEP இன் பிரதிநிதி ஒருவர் மற்றும் IGES இன் இரண்டு முகவர்கள் செயற்றிட்ட முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதியிலிருந்து யூலை மாதம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கையில் அவதானிக்கப்பட்டது.





2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் "பிளாஸ்டிக் கழிவுகளற்ற காலி நகரமொன்றாக மாற்றுதல்" முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலைகள், ஹோட்டல்கள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் புடைவை ஆகிய பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான நான்கு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி காலி நகரத்தில்ஒரு களப் பயணத்திலும் இந்தக் குழு பங்குபற்றியது.

கடல்சார் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண் பிளாஸ்ரிக் குறைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக மேற்படி முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் IGES ஆசிரியர் வளங்கள் புத்தகமொன்று வரைவு செய்யப்பட்டது.







## 2.2.7 ஆசிய பசிபிக் நாடுகளில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வீசப்படுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் அதன் கழிவுப் பொருட்களை சுற்றாடல் நேயமிக்க விதத்தில் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான திறன் விருத்தி

இந்தச் செயற்றிட்டம் சீனாவின் BCRC ( ஆசியா மற்றும் பசுபிக்) வலயங்களுக்கான பாசல் உடன்படிக்கையின் பிராந்திய நிலையத்தின்) ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுகின்றது. இலங்கையில் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்திய பின்னர் அகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக் (SUP) உருவாக்கம் பெறுவதை குறைத்தல் மற்றும் தடுத்தல் இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த செயற்றிட்டத்திற்கான நிதி அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர் நிறுவனத்தினால் (NORAD) வழங்கப்படுகிறது. இச்செயற்றிட்டத்திற்கான ஆலோசனை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்திவிட்டு வீசப்படுகின்ற பல பிளாஸ்டிக் பொருட்களின் ஆரம்ப தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்திய பின்னர் அகற்றப்படுகின்ற/ வீசப்படுகின்ற பிளாஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பான நிலைமையினை கண்காணிப்பதற்காக வினாக்கொத்து ஒன்றின் ஊடாக நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் ஆய்வொன்று நடாத்தப்பட்டது. அமைச்சின் கீழ் புதிதாகச் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்திவிட்டு வீசப்படுகின்ற பிளாஸ்டிக் பொருட்களின் வாழ்க்கைச் சுழற்சிப் பகுப்பாய்வுக்காக தரவுகள் ஆலோசகரினால் சேகரிக்கப்பட்டன.

மேலும் இலங்கையில் டெட்ரா பொதியிடல் முகாமைத்துவம் தொடர்பாக மற்றும் உயிரியல் அழிவுக்கு உட்படுகின்றபொதியிடல்தொடர்பாகவும் ஆய்வு செயற்பட்டு வருகின்றது.



## 2.2.8 பூகோள சுற்றாடல் வசதிகளின் கீழுள்ள ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கலைத் தடுக்கும் உடன்படிக்கைக்கு உரிய தேசிய அறிக்கையிடல் செயன்முறை

ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கப் படுவதனை தவிர்த்தல் உடன்படிக்கையில் இலங்கையின் மையப் புள்ளியாக நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் நிலையை அறிக்கையிடுவதற்கு சுற்றாடல் அமைச்சில் புவியியல் வளங்கள் பிரிவு செயற்படுகிறது. இந்த அறிக்கையிடல் செயன்முறைக்கான உலகளாவிய சுற்றாடல் வசதிகளின் கீழ் காணப்படுகின்ற ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கலைத் தவிர்த்தல் உடன்படிக்கைக்கு உரிய தேசிய அறிக்கையிடல் கருத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கையிடல் கருத்திட்டத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கப்படுவதனை தடுத்தல் உடன்படிக்கையில் அறிக்கையிடல் செயற்பாட்டுக்காக தேசிய மட்டத்தில் தரவுப் பரிமாற்றத்திற்குத் தேவையான பின்னணி என்ற அடிப்படையிலாகும். இந்தப் பணிகளுக்கான நிலம் சார்ந்த தரவுகள் உருவாக்கப்படுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பு நிறுவனங்கள் பல இனங்காணப்பட்டுள்ளன. இந்த அறிக்கையிடலுக்கான மண் சேதன காபன்கள் (Soil organic carbon data), நில விளைதிறன் தரவுகள் (Land productivity data) மற்றும் நிலக் காப்புத் தரவுகள் ( Land cover data) ஆகிய 03 வகுதிகளின் கீழ் தரவுகள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டனஅத்தரவுகளை பயன்படுத்தி இலங்கையின் மண் சேதன காபன் தரவு வரைபடங்கள், நில விளைதிறன் வரைபடங்கள் மற்றும் நில காப்புத் தரவு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், தரவுகளிலிருந்து தரவுத் தொகுதியொன்று அமைச்சில் தாபிக்கப்பட்டுள்ளது அனைத்து தரவுகளையும் ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கப்படுதலை தவிர்த்தல் உடன்படிக்கைக்கு அறிக்கையிடல் முடிவுறுத்தப்பட்டுள்ளது. செயற்றிட்டம் 2022.12.31 ஆம் திகதி பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.2.9 ஆரோக்கியமான நிலத் தோற்றச் செயற்றிட்டம்

உலகளாவிய சுற்றாடல் வசதிகள் (Global Environment Facility) இன் கீழ் நிதி வசதிகளை வழங்கப்படுகின்ற இது 2 மில்லியன் ஐ.அ.டொலர் கொண்ட ஒரு செயற்றிட்டம் ஆகும். இந்த செயற்றிட்டம் தென்னாசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து செயற்படுத்தப்படுகின்றது.

எல்லாங்கா சுற்றாடல் முறைமை மற்றும் அதன் உயிரியல் பல்வகைமையை நிலைபேறான வகையில் பராமரிப்புச் செய்வதனூடாக விவசாய நிலங்கள் நிலையான நுகர்வு ஊக்குவிப்பு, உணவுப் பாதுகாப்பு, நல்ல இருப்பு மற்றும் சுற்றாடல் நட்புறவு ரீதியாக மேம்படுத்தல், இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இச்செயற்றிட்டம் அனுராதபுர மாவட்டத்தில் திறப்பனை மற்றும் பலுகஸ்வெவ பிரதே செயபெ பிரிவுகளில் இச்செயற்றிட்டத்தின் மூலம் இந்தப் பிரதேசங்களில் நிலையான நிலமுகாமைத்துவம், நிலையான நீர் முகாமைத்துவம், நிலைபேறான விவசாயம் மற்றும் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், சுகாதாரத் தரத்தையும் மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் கீழ் எல்லங்கா முறைமைகளை



இற்றைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தற்போது பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் பெல்லன்கடவல மற்றும் தும்பக்குளம் ஆகிய குளங்களின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இந்த குளங்களின் புனரமைப்பு பணிகள் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாய உயிரியல் பல்வகைத் தன்மையை அதிகரிப்பதற்காகவும் விவசாயிகளின் வீட்டுத் தோட்டங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக அபிவிருத்தி செய்யும் நோக்கில், செயற்றிட்டப் பிரதேசத்தில் விவசாய சமூகத்தினரிடையே மரக்கறிகள் மற்றும் பருப்பு வகை விதைகள் விநியோகம் என்பன மேற்கொள்ளப்பட்டன. விவசாய சமூகத்தின் வருமான நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் விலங்கு பராமரிப்பிற்கான விருப்பம் காட்டுகின்ற தரப்பினர்கள் இனங் காணப்பட்டுகோழிக் குஞ்சுகள் பங்கிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக நிலையான நில முகாமைத்துவம், நிலைபேறான சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் விலங்கு பராமரிப்பு ஆகிய துறைகள் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தும் நோக்கத்துடன் 20 நிகழ்ச்சித் திட்டங்கள் இது வரை நடாத்தப்பட்டுள்ளது.





## 2.2.10 இலங்கையில் நிலையான மற்றும் வினைத்திறன் கொண்ட மின் இடப்பெயர்ச்சி முறைமையொன்றை மேம்படுத்தலுக்கான செயற்றிட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

இலங்கையில் நிலையானதும் மற்றும் வினைத்திறன் மிக்கதுமான இலத்திரனியல் இடப்பெயர்ச்சி முறைமையினை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் மூலம் இலத்திரனியல் இலத்திரனியல் வாகனங்களை மேம்படுத்துவதற்கான மின் கலங்களை சரியான முறையில் வெளியேற்றல், இலத்திரனியல் வாகனங்களை ஊக்குவிப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரித்தல் உள்ளிட்ட தேசிய மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது அது பரிஸ் உடன்படிக்கையின் கீழ் காலநிலை மாற்றங்களை குறைப்பதற்காக பங்களிக்கும் தேசிய அடிப்படையில் தீர்மாணிக்கப்பட்ட பங்களிப்புக்கள் (NDCs) அடைவதற்கான காரணமாக அமையும். மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் ஆலோசனை உதவிச் சேவையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இச் செயற்றிட்டத்திற்குரிய முன்மொழிவுப் பத்திரம் தயாரிக்கப்பட்தோடு பங்குதார உலகளாவிய சுற்றாடல் வசதிகள் நிறுவனம் (GEF) இனால் இந்தச் செயற்றிட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.2.11 .இலங்கையில் மொன்றியல் அமைப்பின் ஏற்பாடுகளை செயல்படுத்தல்

இலங்கைக்குள் மொன்றியல் அமைப்பின் ஏற்பாடுகளைச் செயல்படுத்தல் கருத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

கிகாலி செயல்படுத்தல் திட்டத்தை தயாரிக்கும் முன்னைய கருத்திட்டத்தின் (Preparation of Kigali Implementation Plan) ஆரம்ப கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள்/வளிச் சீராக்கிகள் துறையின் பங்குதாரத் தரப்பு நிறுவனங்களான இலங்கை சுங்கம் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், தொழில்நுட்ப தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் சேர்த்து இனங்காணப்பட்ட செயற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள்.
2022 ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச், யூன் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் நடாத்தப்பட்டது.

இலங்கையில் மொன்றியல் அமைப்பின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய பங்குதாரத் தரப்பினர்களின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்காக செயற்றிட்டக் வழிநடாத்தல் குழுக் கூட்டம் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

HCFC ஏற்றுமதி பங்கு முறைமையின் கீழ் கோட்டா வழங்கல் (quota distribution) ஓசோன் தேய்வு இரசாயனப் பொருட்களை கட்டுப்படுத்தும் பணிகளுக்காக பொறிமுறையின் கீழ் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு 16 தகைமையுடைய நிறுவனங்களுக்கான 8.58325 மெட்றிக் தொன் (156,059.09 கிலோ கிராம்) தேசிய ஓசோன் அலகின் பரிந்துரை மீது விநியோகிக்கப்பட்டது.

தேசிய ஓசோன் பிரிவு/அலகின் கீழ் 2022 ஆம் ஆண்டில் 103 கைத்தொழிற் கலைஞர்ளுக்கு தேசிய தொழில்சார் தகைமைகளை வழங்குவதற்காக நிதி மற்றும் தொழில் நுட்பப் பங்களிப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது. .

நடாத்தப்பட்ட பயிற்சிகள், செயலமர்வுகள், அறிவுறுத்தல் வகுப்புக்கள் மற்றும் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை சுங்கத்தின் 25 உத்தியோகத்தர்களுக்கு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. நாட்டின் சகல பகுதிகளுக்கும் வளிச்சமனி நிபுணர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் சம்பந்தமாக 02 நாட்கள் கொண்ட பயிற்சி அமர்வுகள் 02 நடந்தேறியது. சர்வதேச ஆலோசகரின் உதவியுடன் வளிச்சீராக்கி முறைமைகளில் பொருத்துதல் மற்றும் விரைவாக தீப்பிடிக்கும் சிறிய உபகரணங்களை கையாளுதல் பற்றிய நடைமுறை அறிவு 02 நிகழ்ச்சித்திட்டங்கள் வளிச்சீரா மற்றும் குளிர்சாதனத் துறையில் ஆலோசனையாளர்கள் மற்றும் கைத்தொழிற் துறையில் சேவையில் உள்ள 10 தொழில்நுட்பவியலாளர்கள் அடங்கிய குழுவுக்காக லங்கா ஜேர்மனிக் கைத்தொழில் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உதவியுடன் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

விரைவில் தீப்பற்றக்கூடிய குளிராக்கிகள் தொடர்பாக அறிவுறுத்தும் 2 திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவன மட்டத்திலும் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள்/ வளிச் சீராக்கிகள் துறையில் பணியாற்றுகின்ற, முகாமைத்தவ உதவியாளர், பொறியிலாளர்கள்,தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவன உத்தியோகத்தர்களுக்கு இலங்கையில் ஹைட்ரோ புலோரோ காபன் (H F C s ) கட்டங்களுக்கமைய கட்டுப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

குளிர்சாதனப் பெட்டிகளின் கொள்வனவு, குளிர்சாதனப் பெட்டிகளைப் பராமரித்தல், குளிர்சாதனப் பெட்டிகளின் பயன்பாடு, வீட்டு வளிச்சீராக்கி இயந்திரக் கொள்வனவு மற்றும் பராமரிப்பு, வீட்டு வளிச்சீராக்கி மற்றும் வாகன வளிச்சீராக்கி உபகரணங்கள் என்பனவற்றின் சரியான பயன்பாடு தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சான்றிதழ் பெறாத (2004 க்குப் பின்னர் NVQ. சான்றிதழ் இல்லாத)
வளிச்சீராக்கி மற்றும் குளிர்சாதனப் பெட்டி தொழிநுட்பவியலாளர்களுக்காக 03 குளிராக்கி நோய் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (RPL) 03 நடாத்தப்பட்டன.

குளிராக்கிகள் சேகரிப்பு மற்றும் மீள் சுழற்சி செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிக்கும் பொருட்டு ஆறு ஒரு நாள் செயலமர்வுகள் மொறட்டுவை, பண்டாரவளை, கொலன்னாவை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் குருநாகல் ஆகிய குளிரூட்டல் மீள் சுழற்சி நிலையங்களில் நடாத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டுக்குரிய இலங்கையினால் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நுகர்வுத் தரவு அறிக்கை 2022.10.14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் ஓசோன் செயலகம் மற்றும் பல்தரப்பு நிதியம் ஆகியவற்றுக்கு அறிக்கையிடப்பட்டது.

“வாழ்வின் இருப்பைப் பாதுகாப்பதற்காக உலகளாவிய ஒத்துழைப்பு” என்ற தலைப்பில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி ஓசோன் தினத்தினை நினைவு கூறும் வைபவம் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டாக்டர். அணில் ஜாசிங்ஹ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.




இதன்போது முன் கற்றல் முன்னேற்ற மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அறிவூட்டப்பட்டதுடன் இலங்கை ஜேர்மன் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு குளிராக்கி வாயு பகுப்பாய்வு (portable refrigerant gas analyzer) கருவியொன்று வழங்கப்பட்டது. இத் துறையில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை பெண் சாரணர் சங்கத்திற்காக சின்னம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டதோடு "Ozone2Climate 2021-2022" சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

ஓசோன் தினக் கொண்டாட்ட நிகழ்வுகளை



அடிப்படையாகக் கொண்டு ரீ சேர்ட் மற்றும் ஓசோன் தொடர்பாக மக்கள் மத்தியில் செய்தியொன்றைக் கொண்டு செல்லக்கூடிய வகையிலான சூழல் நேயமுள்ள வகையில் பொருட்களைக் கொண்டுசெல்லக்கூடிய பை ஒன்றும் தயார் செய்யப்பட்டது.

ஓசோன் படையின் பாதுகாப்பு மற்றும் வளி மாசடைதல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முதற்கட்ட முயற்சியாக, மகளிர் வழிகாட்டல் சமனலக் கிளையினால் முச்சக்கர வண்டி சவாரி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

ஓசோன் படையின் பாதுகாப்புத்தொடர்பாக பிரச்சாரம்செய்வதற்காக பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சுற்றாடல் அமைச்சின் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயன முகாமைத்துவப் பிரிவின் வேண்டுகோளின் பிரகாரம் நிலைபேறான குளிர்த் தொழில்நுட்பம் கொண்ட உணவு வங்கிகள் கொழும்பு மாநகர சபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற முன்பிள்ளை
அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் உணவு வங்கிகள் எண்ணக்கருவை விரிவுபடுத்துவதற்காக புனித் தலங்களுக்கு சூழல் நேய 15 குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிரூட்டிப் பிரிவின் தொழில்நுட்பவியலாளர்கள் சம்பந்தமாக தர மதிப்பீடு மற்றும் தேவைப்பாட்டு மதிப்பீட்டை மேற்கொள்ளும் பொருட்டு தேசிய ஓசோன் அலகினால் ஆலோசகர் ஒருரின் உதவியுடன் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் குளிரூட்டிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் துறையில் பயிற்சி பெறுகின்றவர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்களுக்காக சந்தைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் அவர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களின் விசேட திறமைகளை விருத்தி செய்வதற்கான திட்டமொன்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவியுடன் சுற்றாடல் அமைச்சினால் தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தின் (Vocational Education & Training Plan) இறுதி வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டதோடு அதன் செல்லுபடியான தன்மையை பரிசீலனை செய்வதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் பயிற்சிப் பிரிவு மற்றும் குளிர்சாதனப் பெட்டி மற்றும் குளிரூட்டி/வளிச்சீராக்கி கைத்தொழில் துறைக்கு
பங்குதரப்பு செயலமர்விற்கு ஆற்றுப்படுத்தப்பட்டனர். அதன்படி, அங்கு கலந்துரையாடி பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய மீளத் தயாரிக்கப்பட்ட வருகின்றது.



## 2.2.12 உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக தேசிய உயிர்பாதுகாப்பு சட்கத்தை செயற்படுத்தல்

கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக தேசிய உயிரியல் பாதுகாப்புக்குரிய முன்மாதிரி விளைதிறன் தகவல்கள் தடைநீக்கல் பொறிமுறையொன்றைத் தயாரித்து அதனை மேற்கொள்ளல், மரபணு மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்தக்கள் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான பொறிமுறையொன்றைத் தயாரித்தல், தொழில்நுட்ப தகவல் கொண்ட தரவு முறைமைத் தயாரித்தல் இக்கருத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

மரபணு மாற்றியமைக்கப்பட்டுள்ள உயிரினங்களை இனங்கண்டு கொள்வதற்குரிய கொள்திறன் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்தல், ஆய்வுகூட தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் பொதுமக்கள்; மத்தியில் உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான அறிவு, மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்தல் போன்ற நிகழ்ச்சிச் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கருத்திட்டம் 4 ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளதோடு ஒவ்வொரு ஆக்கக் கூறுகளினதும் முன்னேற்றம் பின்வருமாறு.

ஆக்கக் கூறு - 1

உயிரியல் பல்வகைமை பாதுகாப்புக்கான கொள்கைகள், நிறுவன மற்றும் வழிநடாத்தல் சட்டகத்தை வலுப்படுத்துதல்.

• உயிரியல் பாதுகாப்பு திட்டத்தை தயாரித்து முடிக்கப்பட்டது. செயற்படுத்தும் அதிகாரம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடப்பட்டது.

• உயிரியல் பாதுகாப்புக்கான விதிகள் மற்றும் உயிரியல் பாதுகாப்புக்கான நிர்வாக மற்றும் வழிநடாத்தல செயலொழுங்குகள் .

• உயிரியல் பாதுகாப்புக்கான தீர்ரத்தல் பொறிமுறை (BCH) இணையப்பக்கம் வெளியிடப்பட்டது.

http://lk.biosafetyclearinghouse.net/

ஆக்கக் கூறு 2



ஆபத்து மதிப்பீடு, ஆபத்து முகாமைத்துவம் மற்றும் ஆபத்து தொடர்பாடலுக்கான முறைமையை மேம்படுத்தல் பின்வரும் வழிகாட்டல்கள் பூரணப்படுத்தப்பட்டன.

ஆய்வு கூடத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்களின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களுக்கான சுற்றாடல் ஆபத்தை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களுக்கான பாதுகாப்பு நிலைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வெளிக்களப் பரிசோதனைகளை நடத்துவதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களில் இருந்து பெறப்பட்ட உணவுகளின் பாதுகாப்பை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட நுளம்புகளை பரிசீலனை செய்வதற்கான வழிகாட்டல்

நிறுவன உயிரியல் பாதுகாப்புக் குழுவுக்கான வழிகாட்டல்

